STAFF COPY

விலை சதம் 15

# சுதந்திரன்
SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 1999, புரட்டாதி௳ 5 சனி (21-9-68) ஐ: ஆகி: 27 புத்தகம் 22 இதழ் 50




## கோணேஸ்வர ஆலய விவகாரத்தில் தலையிடுபவர்களுக்கு


# தெய்வதண்டனை கிடைத்தே தீரும்!

“கோணேஸ்வர ஆலய விவகாரத்தில் அநீதியானமுறையில் தலையிடுபவர்கள் யாராக இருந்தாலும் அதற்கான கடவுள் தண்டனையை அனுபவித்தே தீரவேண்டும். இது சரித்திரம் காட்டும் மறுக்கமுடியாத உண்மையாகும்;

“1622-ம் ஆண்டு இந்தக் கோவில் மீது தாக்குதல் நடத்திய பின்னர்—இக்கோவிலை தரைமட்டமாக்கிய சில நாட்களில் கொன்ஸ்ரான்ரின் டீசா என்ற போர்த்துக்கீயன் மறு உலகத்துக்கு அழைக்கப்பட்டுவிட்டது சரித்திரபூர்வமாக நாம் அறிந்துகொண்ட உண்மை.”

இவ்வாறு மூதவையில் உணர்ச்சிமிக்க நிலையில் இம்மாதம் 16-ம் திகதி உரையாற்றிய திரு. மு. திருச்செல்வம் கியூ. சி. தெரிவித்தார்.

திரு. திருச்செல்வம் தமது சொற்பொழிவின்போது கோணேசராலயம் பற்றி குறிப்பிட்ட நேரங்களிலெல்லாம் உணர்ச்சி மேலிட்டவராகக் காணப்பட்டார். (அவரது பேச்சு விபரம் உள்ளே காண்க.)



திருமலை கோணேஸ்வரம்.



கோணேசராலயம் பற்றி திருமலை நகரசபைத் தலைவர் டாக்டர் எஸ். சிவானந்தன் விடுத்த அறிக்கையொன்றிலும் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

“திருமதி பண்டாரநாயகா ஆட்சிக் காலத்தில் நிரந்தரக் காரியதரிசியாக கடமையாற்றிய திரு. என். கியூ. டயஸ் அருள்மலையில் இராணுவத்தை நிறுத்தி ஒரு வாரத்தினுள் சிறிமா அரசாங்கம் கவிழ்ந்தது. சிவலிங்கம் கல்லினால் அமைக்கப்பட்டதா அல்லது மரத்தினால் செய்யப்பட்டதா என்று அறிவதற்காகச் சிவலிங்கத்தை தனது பேனாக் கத்தியால் சுரண்டிய ஒருவர் இன்று எங்கே? இவ்விதம் நடக்க விரும்புவோருக்கு இது ஒரு படிப்பினை என்று கூற விரும்புகிறேன்.”

## மூதவையில் திருச்செல்வம் இட்ட சாபம்!

## திருச்செல்வம் நியமித்த குழுவை பிரதமர் கலைத்தது தவறு!

—தினமணி

“கோணேஸ்வரம் இலங்கையிலுள்ள இந்துக்களுக்குப் புனிதமான ஸ்தலம். அவ்வாலயத்தைப் புனிதநகராக்கவதற்கான எல்லைகளை வகுக்கத் தமிழ் மந்திரி திரு. திருச்செல்வம் நியமித்த குழுவின் நடவடிக்கைகளை இலங்கைப் பிரதமர் தடைசெய்திருக்கத் தேவையில்லை. வேண்டுமானால் பௌத்தர்களின் நலன்களையும் கவனிக்கும்படி அக்குழுவுக்குப் பிரதமர் ஆலோசனை கூறியிருக்கலாம்.”

—இவ்வாறு சென்னையிலிருந்து வெளிவரும் நாளிதழான தினமணி அதன் 17ம் திகதிய இதழில் எழுதியுள்ள தலையங்கத்தில் குறிப்பட்டுள்ளது.

## ஜீ. ஜீ. முன்வருவாரா

“தமிழ்த் தலைவர்களும், தமிழ்க் கட்சிகளும் ஐக்கியப்படவேண்டும் என்று கூறிவரும் திரு. பொன்னம்பலம், தமிழ் மக்களுக்கு பொதுவான

(9-ம் பக்கம் பார்க்க)

## புனிதநகர்ப் பிரச்சினை மீது 20ந் திகதி திருமலையில் ஆர்ப்பாட்டம்!

திருமலை பிரெடெரிக் கோட்டையில் அமைந்துள்ள கோணேசராலப்பகுதியை புனித நகராக்குவதற்கு எல்லைவகுக்க திரு. திருச்செல்வம் நியமித்திருந்த கமிஷனை பிரதமர் கலைத்ததை ஆட்சேபித்தும், புனிதநகராகப் பிரகடனம் செய்யக் கோரியும் திருமலையில் மாபெரும் ஆர்ப்பாட்டமும், பொதுக் கூட்டமும் இம்மாதம் 20ந் திகதி நடைபெறுகிறது.

இக் கூட்டத்தையும், ஆர்ப்பாட்டத்தையும் திருமலையிலுள்ள தமிழ் மக்கள் நடத்துகிறார்கள்.

## தமிழ் தினசரிகளின் சுயரூபம் அம்பலம்!

கோணேஸ்வரத்தை புனிதநகராகப் பிரகடனம் செய்யவேண்டுமென்று இந்நாட்டுத் தமிழ் மக்கள் ஒரே குரலில் கோரிக்கை விடுத்து வருவது தெரிந்ததே. தமிழ் பேசும் மக்களின் இந்தக் கோரிக்கையை ஆதரித்தும், பிரதமரது நடவடிக்கையைக் கண்டித்தும், இந்நாட்டுத் தமிழ் தினசரிகளில் ஒன்று கூட தலையங்கம் தீட்ட இதுவரை முன்வராதது குறிப்பிடத்தக்கது.

(9-ம் பக்கம் பார்க்க)

இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பு தி ர்

எமது சிறுகதை

"இட்லி வச்சு எத்தனை நாழியாச்சு!...... ஞாயிற்றுக்கிழமை வந்தா இந்தத் தொல்லைதான் உன்கிட்டே...மாடியிலே என்னடா பண்றே! சாப்பிட்டு விட்டுப்போய்ப்படியேன்-"

இந்தக்கோடி அர்ச்சனையின் குரல் ஒலி கேட்ட போதுதான் எனக்குப் பிரக்ஞை வந்தது: அந்த வார ',இலக்கியப் பூஞ்சோலை'' யில் புகுந்தவன் என்னை மறந்து படித்துக் கொண்டிருந்தேன். ''தத்துவப் பிரியன்'' சிறுகதைகள் என்ருல் எனக்குப் பாஸந்தி சாப்பிடுகிற மாதிரி. அவரது குறுநாவல் ஒன்றைப் படிக்கத் தொடங்கிவிட்ட பிறகு பூலோக நினைவுகள் வருமோ? அப்படித்தான் வரலாமோ? வந்தால் அது கதையின் பலவீனத்தையல்லவா குறிக்கும். மனத்திற்கு மிகப் பிடித்தமான சினிமாவைப் பார்த்துக் கொண்டிருக்கும்போது இடையில் மின்சாரம் நின்றுபோனுல் ஏற்படுகிற வெறுப்பையும், அலுப்பையும், அவரது கதைகளைப் படித்துக் கொண்டிருக்கும்போது ஏற்படும் இடையீடு காரணமாக உண்டாகும் உணர்ச்சிகளுக்கு ஒப்பிடலாம்.

அந்தக்குறுநாவலைப்படித்துக் கொண்டிருக்கும்போது அம்மா கீழிருந்து ஏதோ கேட்டமாதிரி இருந்தது. நானும் ஊம் கொட்டினேன். அவள் 'இட்லி வைக்கட்டுமா' என்றுதான் கேட்டிருப்பாள் என்பது இப்போதுதான் புரிகிறது.

அம்மாவின் ஆணைப்படி சிற்றுண்டியை முடிக்கப் போனேன். நெடுநாட்களாக என் அடிமனதில் வைக்கப்பட்டிருந்த ஆவலை இந்தக் குறுநாவல் கிளப்பி விட்டு விட்டது.

நாடு புகழும் சிறு கதை மன்னர் தத்துவப் பிரியனைக் கடந்த நான்காண்டுகளாக அறிவேன், நல்ல பழக்கமும் உண்டு. அவரது சிறு கதைகளைத் தொடர்ந்து படித்து வரும்எனக்கு அவரதுவாழ்க்கையைப் பற்றிய ரகசியத்தை அறிந்து கொண்டுவிட வேண்டுமென்ற அடங்காத ஆவல் உண்டு. அவர் கொஞ்சம் முன்கோபி. வெகு சீக்கிரத்தில் உணர்ச்சி வசப்படுகிற ரகத்தைச் சேர்ந்தவர், பத்திரிகை நிருபர்களே அவரிடம் எச்சரிக்கையாக நடந்துகொள்வார்கள் என்று சொல்லக் கேட்டிருக்கிறேன். ஆகவே அவரது சொந்த வாழ்க்கையைப் பற்றிய ரகசியத்தைக் கேட்கத் தைரியமின்றியே இருந்தேன்.

காதல் கதைகளைச் சுவை சொட்டச் சொட்ட எழுதிக் குவிக்கும் அவர் பிரமச்சாரியாகவே காலங் கழிப்பது ஏன்? இது எனக்கு மட்டுமில்லை என்னைப் போன்ற பலர்க்கும் புரியாத புதிர்தான். இன்றைக்கு வெளிவந்த குறுநாவல் அவர் வாழ்வின் ரகசியத்தைப் பிரதிபலிப்பதாகவே எனக்குப் பட்டது.

என்னிடம் அவர் மனம் விட்டுப் பேசுவதுண்டு. எனது இலக்கிய ஈடுபாடும் விமர்சனக் கண்ணேட்டமும் அவரிடம் எனக்கு உறுதியான நட்பைத் தேடிக் கொடுத்தன. 'இவ்வளவு இளம் வயதில் உங்களுக்கு இருக்கும் இலக்கியப் பயிற்சி எனக்கு அந்தக் காலத்தில் இல்லை கண்ணன்' — என்று அவர் என்னைப் பலமுறை மனமார வெளிப்படையாகவே பாராட்டியிருக்கிருர். என்னைப் போன்ற கல்லூரி மாணவர்கள் பலர் அவருடைய 'விசிறி'களாக இருக்கிருர்கள் என்ருலும் என்னிடம் அவர் தனிஅன்பு காட்டுகிருர் என்பது உண்மையே. அதனுல் இன்றைக்கு அவரிடம் இந்தக் கேள்வியைக் கேட்டுவிடுவது என்ற முடிவோடு அவரது அறைக்குப் போனேன்.

அவர் நகரத்தின் சந்தடிகளுக்கு அப்பால் உள்ள ஒரு வீட்டின் மாடி அறையில் வசித்து வருகிருர். அவர் எங்கேயாவது வெளியே போய்விடப் போகிருரோ என்ற அச்சத்தில் விரைந்து சென்றேன். 'தத்துவப் பிரியன் வெளியே' என்ற பெயர்ப்பலகை என்னை வரவேற்றது. தாங்கமுடியாத ஏமாற்றத்தோடு திரும்பி சில அடிகள் நடந்தேன்.

பின்னுலிருந்து வந்த ''கண்ணன்''—என்ற குரல் என் போக்கைத் தடுத்தது. குரல் வந்த திசையில் என் கவனத்தைத் திருப்பினேன். மாடியில் தத்துவப் பிரியன் நின்று கொண்டிருந்தார். எனக்கு ஆச்சரியமாக இருந்தது. பாய்ந்து ஓடி மாடிப் படிகளைக் கடந்தேன்.

'வெளியே'—என்ற அறிவிப்பைப் பார்த்து ஏமாந்து விட்டாயோ! இன்று ஒரு குறுநாவல் எழுதி முடித்து விடலாம் என்று முடிவுசெய்தேன். தொந்தரவுகளைக் குறைத்துக் கொள்ள இந்த வேலையைச் செய்தேன். ஏதோ சந்தர்ப்பவசமாக எட்டிப்பார்த்தேன். இந்த அறிவிப்புக்களையெல்லாம் கண்டு நீங்கள் இனிமேல் ஏமாற வேண்டாம். பெரிய இடத்தில் சிபாரிசு பிடிப்பதற்காக என் சொந்த ஊரிலிருந்து யாராவது வந்துவிடுகிருர்கள். எழுத்தாளனைப்பற்றி அந்தக்கிராமத்துப் பேர்வழிகட்கு என்ன புரிந்து கொள்ள முடிகிறது. அந்த மாதிரி தொந்தரவுகளைக் குறைத்துக் கொள்ளத்தான் இந்த வேலை. உனக்கு இந்த அறைக்கு எப்பொழுது வேண்டுமானுலும் வருவதற்கு முழு உரிமை உண்டு' —என்று அவர் சொன்ன பிறகுதான் எனக்கு உயிர் வந்தது.

'நீங்கள் நாவல் எழுத முனைந்திருக்கிறீர்களே!... நான் போய்விட்டு மாலையில் வருகிறேன்'— என்று சொல்லிக் கொஞ்சம்நோட்டம் பார்த்தேன்.

'இல்லையில்லை. நான் வழக்கம்போல இரவில் எழுதுவதாக முடிவு செய்துவிட்டேன். கொஞ்சநாழி இருங்கள் பேசிக் கொண்டிருக்கலாம்'—என்ருர்.

எனக்கு நம்பிக்கை பிறந்தது. என் கல்லூரிப்படிப்பிலிருந்து பேச்சு தொடங்கி வியத்நாம் போர்வரை போய் ஒரு திருப்பத்தில் பேச்சு நின்றது. அவர் பேச ஆரம்பித்துவிட்டால் நான் அந்தப் பேச்சின் போக்கை மாற்ற முயற்சிப்பதே இல்லை. அவர் தன்னை மறந்து பேசினுல் அருமையான விஷயங்கள் வந்துவிடும். பேசிக் கொண்டே போன அவர்,

'ஆமாம் நீங்கள் ஏதாவது குறிப்பிட்ட காரியமாக வந்தீர்களா? இல்லை... —என்று கேட்டார்.

'ஆமாம்' என்றேன்.

''அடடா; நான் ஏதேதோ பேசிக் கொண்டே இருந்து விட்டேனே!''—என்று உண்மையாகவே வருத்தப்பட்டார்.

'அப்படி ஒன்றும் சீரியசான மேட்டர் இல்லை...' —என்று இழுத்தேன்.

'என்ன இவ்வளவு நாள் பழகிவிட்டு...'—அவர் பதிலிலிருந்து அவரிடம் நான் ஏதோ உதவி எதிர்பார்த்து வந்திருப்பதாகக் கருதிவிட்டார் என்பது நன்ருகத் தெரிந்தது.

'இன்று வந்த இலக்கியச் சோலையில் உங்கள் குறுநாவலைப் படித்தேன்''—என்று சொல்லி நிறுத்தினேன்.

'அதனுலென்ன?' — அவர் ஆவலோடு நான் சொல்லப் போவதை எதிர்பார்த்தார்.

''எனக்கு நீண்ட நாட்களாகத் தங்களிடம் கேட்க வேண்டுமென்று ஆசை'. அவர் என் மனத்தில் மறைந்து கிடக்கும் கேள்வியை ஊகிக்கிருர் என்பது அவரது முகத்திலிருந்து நன்ருகத் தெரிந்துகொள்ள முடிந்தது.

'இவ்வளவு உயர்ந்த காதல் இலக்கியங்களைப் படைத்துச் சிரஞ்சீவி கதாநாயகர்களை நாட்டில் நடமாடவிட்டிருக்கும் தாங்கள் ஏன் திருமணமே செய்து கொள்ளவில்லை'. — என்று துணிச்சலாகக்கேட்டு நிறுத்தினேன்.

நான் கேள்வியை வெளியிட்டவுடனேயே அவரிடம் காணப்பட்ட துடிப்பு அடங்கியது.

எண்ணெய் இல்லாத விளக்கு கொஞ்சம் கொஞ்சமாக ஒளி மங்குவது போல அவர் முகத்தில் ஒளி குறைந்தது. நாம் தவறுசெய்துவிட்டோமோ என்று ஒரு கணம் நினைத்தேன். அந்த வினுடிகளை நான் மிகவேதனையோடு கடந்தேன்.

'இந்தக் கேள்வியைக் கேட்கும் துணிச்சல் இதுவரை உங்களைத்தவிர வேறு எந்த நண்பர்க்கும் வரவில்லை'—என்ருர் அவர். ஆனுல் இதைச் சொல்லும் போது அவர் அமைதியாகவே காணப்பட்டார்.

'என் கேள்வி தங்கள் உணர்ச்சிகளைப் புண்படுத்தியிருந்தால் தயவுசெய்து மன்...' — என்னை அவர் இடைமறித்தார்.

'நான் சாவதற்குள் இந்த ரகசியத்தை யாரிடமாவது சொல்லிவிட வேண்டுமென்றுதான் நினைத்திருந்தேன்...''

எனக்கு உயிர் வந்தது. காதுகளைக் கூர்மையாக்கிக் கொண்டேன். இந்த உலகையே மறந்தேன். அவர் உதடுகளின் அசைவு மட்டுமே என் கண்களில் தெரிந்தன. அவரது பேச்சுக் குரல் மட்டுமே என் காதுகளில் ஒலித்தது. பிறரது ரகசியங்களைத் தெரிந்து கொள்வதில்தான் எத்தனை ஆர்வம்? என்ன துடிப்பு? மனித வாழ்வின் மற்ற பக்கங்களைத் தெரிந்துகொள்ளும் ஆவல்தானே நாவல் இலக்கியத்தின் பிறப்பிடம்!

'எனக்கு உன் வயது இருக்கும். அந்த வயதிலேயே எம். ஓ. பட்டமும் வாங்கியிருந்ததோடு, எழுதவும் தொடங்கியிருந்தேன். சென்னை நகரக் கல்லூரி ஒன்றில் எனக்கு விரிவுரையாளர் பதவி கிடைத்திருந்தது.

''எழுத்துத்துறையில் முன்னுக்கு வருவதற்குச் சென்னை பொருத்தமான இடம் என்பதால் தயக்கமின்றிச் சென்னைக்கு வந்து உத்தியோகம் ஏற்றேன்.

''ஒரு வீட்டு மாடியில் அறையெடுத்துக்கொண்டு கல்லூரிக்குப் போய்வருவதும் எழுதிக் குவிப்பதுமாக இருந்தேன். சென்னைக்கு வந்து பணியிலமர்ந்த பிறகு என் எழுத்தில் புதிய உயிரோட்டம் இருந்தாக நண்பர்கள் கூறினர். என் எழுத்துக்கு நல்ல வரவேற்பும் இருந்தது.

நாள்தோறும் ஏராளமான பாராட்டுக் கடிதங்கள் வந்து குவிந்தன. அந்தப் பாராட்டுக் கடிதங்கள் எனக்கு எழுத்தில் ஒரு வெறிவையே ஊட்டின என்ருல் தவறில்லை. வாசகர்களின் பாராட்டுத்தானே எழுத்தாளனின் ஜீவன்.

ஒருநாள் அழகான கையெழுத்தைத் தாங்கி ஒரு கடிதம் வந்தது.

'அது ஒரு பெண்ணின் பாராட்டுக் கடிதமோ?'

'உன் ஊகம் மெய்தான்: ஆனுல் ஒரு பெண்ணிடமிருந்து எனக்குப் பாராட்டுக் கடிதம் வந்தது அது ஒன்றும் முதல்முறையில்லை: அவள் ஒரு ஆரம்ப எழுத்தாளர் என்பதை அந்தப் பாராட்டுக் கடிதம் பளிச்சென்று காட்டியது. ஒவ்வொரு கதைக்குப் பிறகும் அந்தப் பாராட்டுக் கடிதம் தவருமல் வந்தது: ஆனுல் அதில் ஒரு வேடிக்கை! அந்தப் பெண்ணின் முகவரி அவளது எந்தக் கடிதத்திலும் இல்லை! நாட்கள் ஓடின; எவ்வளவு முயன்றும் அவளது முகவரியை என்னுல் கண்டுபிடிக்கவே முடியவில்லை!

'அவளே ஒரு நாள் நேரில் வந்து...'

நான் என் கற்பனைத் திறனைக் காட்ட முயன்றேன்.

'இல்லை!'

'பின்னே!'

'கடைசியில் அவளாலேயே அவள் முகவரியும், என் முகவரியும் ஒன்றுதான் என்று தெரிந்துகொண்டேன். நான் குடியிருந்த வீட்டுக்காரரின் பெண்தான் அவள் அதுமட்டுமில்லை; நான் பணியாற்றிய அதே கல்லூரியின் மாணவியே!'

'விவரம் தெரிந்தவுடன் காதல் வளர்ந்திருக்கும். ஆனுல் அவர் பெற்ருேர்கள் உங்களுக்குத் தடையாக...'

'உன் ஊகம் பாதி சரி. அறிவாளிகளான அவளது பெற்ருேர்கள் எனக்குப் பெண் கொடுக்கத் தயாராயிருந்தார்கள். அவர்களின் ஆசீர்வாதத்தோடு எங்கள் காதல் பயிர் செழித்து வளர்ந்தது. அந்த ஆண்டுக் கோடை விடுமுறை வந்தது. ஊருக்குப் போய் என் பெற்ருேர்களிடம் பக்குவமாக விஷயத்தைச் சொல்லிக் கலியாணத்தை முடிக்க ஏற்பாடுகள் செய்கிறேன் என்று அவர்களுக்கு உறுதி கூறி விட்டுக் கிராமத்திற்குத் திரும்பினேன்.

(9-ம் பக்கம் பார்க்க)

"பாரதிப் பித்தன்"

## எழுத்தாள நண்பர்களுக்கு

இன்று நம்முடைய இளைஞர்கள் மத்தியில், அளவுக்கதிகமான எழுத்தார்வம் தலையெடுத்துள்ளது. புனை கதை, நாவல், கவிதை நகைச்சுவை, போன்ற பல்வேறு துறைகளில் ஏதாவது ஒரு துறையில் முன்னுக்கு வந்து விட வேண்டும் என்ற ஆர்வத்துடிப்பு வளர்ந்து வரும் தமிழ் பேசும் இளைஞர்சமுதாயத்தில் நிறைய ஏற்பட்டுள்ளது. இந்த ஆர்வத்தையும், துடிப்பையும் நல்ல முறையில் பயன்படுத்தி, தமிழ் மொழியில் புதிய எழுத்தோவியங்களை உருவாக்குவதற்கு ஊக்கம் அளிப்பது இந்நாட்டு ஏடுகளின் தலையாய பணியாகும்.

இந்த நாட்டில் முதன் முதலாக அப்பணியைச் செய்தது சுதந்திரன் தான் என்று கூறிக்கொள்வதில் பெருமையடைகிருேம். இன்று முன்னணியிலுள்ள எழுத்தாளர்கள் — அவர்கள் இன்று பல்வேறு திசைகளில் இருந்தாலும் —சுதந்திரன் பண்ணையில் உருவாக்கப் பட்டவர்கள் தாம்.

கடந்த சில ஆண்டுகளுக்கிடையிலே தமிழ் பேசும் சமூகத்தில் புதிய புனைகதையாளர்கள், கவிஞர்கள், மற்றும் எழுத்தாளர்கள் நூற்றுக்கணக்கில் தோன்றியிருக்கிருர்கள். அவர்கள் எல்லோரையும் சுதந்திரன் வாசகர்களுக்கு அறிமுகப் படுத்தி வைக்க முடிவு செய்துள்ளோம். இப்படிச் செய்வது வளர்ந்து வரும் இளம் எழுத்தாளர்களின் முதுகில் தட்டிக் கொடுத்து அவர்களை ஊக்குவிக்க உதவும் என்று நம்புகிருேம்.

எனவே இப்பகுதியை நன்கு உபயோகித்துக் கொள்ளும்படி வளர்ந்து வரும் புதிய இலக்கிய பரம்பரையினரைக் கேட்டுக் கொள்ளுகிருேம். எழுத்தாள நண்பர்கள் தங்களைப்பற்றிய விபரங்களுடன், தங்களுக்கு பிடித்த —நூல்கள், எழுத்தாளர்கள், போன்ற விபரங்கள் —பிடிக்காத விஷயங்கள்— எழுதிய கதைகள்போன்ற பல்வேறு விபரங்களையும் குறிப்பிட்டு எமக்கு அனுப்பிவைப்பார்களாக. அத்துடன் தங்கள் புகைப்படப் பிரதியொன்றும் சேர்த்து அனுப்பப்பட வேண்டியது அவசியம்.

விபரங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:- எழுத்தாளர் அறிமுகம், சுதந்திரன், த. பெ. இல 1183, கொழும்பு.

ஆ—ர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கே. சுப்பிரமணியம்,
உடுப்பிட்டி.

கே: தமிழரசுக் கட்சிக்கு பதவி ஆசை என்கிருரே உடுப்பிட்டி எம். பி?

ப: யாருக்குப் பதவி ஆசை என்பது இப்போது தெரிந்து விட்டதே!

கே: இந்துப் பல்கலைக் கழகத்தை தமிழரசுக் கட்சி ஆதரிக்காததற்கு காரணம் தமிழரசுக் கட்சியின் தலைவர் கிறிஸ்தவராக இருப்பதே என்று தமிழ்காங்கிரஸ் காரர்கள் கூறுகிறார்களே!

ப: இந்துக்களின் புனித ஸ்தலமாகிய கோணேசராலயத்தை புனித நகராக்க பிரதமர் மறுத்ததை ஆட்சேபித்து அமைச்சர் திருச்செல்வம் மந்திரி பதவியையே தூக்கி எறிந்தார். தமிழரசுக் கட்சி அரசாங்கத்திலிருந்தும் வெளியேறி விட்டது. ஆனால் இந்துக்களுக்காக முதலைக் கண்ணீர் வடிக்கும் தமிழ் காங்கிரஸ் எம். பீ.க்கள் இன்னும் அரசாங்கத்தில் ஒட்டிக்கொண்டிருப்பது ஏனும்?

ஃ

வா. சின்னத்தம்பி,
கைதடி வடக்கு.

கே: அமெரிக்காவின் அடுத்த ஜனாதிபதியாக யார் வரவேண்டும்?

ப: யார் வரவேண்டும் என்று கேட்பதைவிட யாருக்கு வாய்ப்புண்டு என்று கேட்டிருந்தீர்களானால் எனது பதில்—நிக்சன்!

கே: வள்ளுவரை தி.மு.க. ஏன் போற்றுகிறது?

ப: ஆஸ்திகர், நாஸ்திகர், பகுத்தறிவாளர்கள் — எல்லோருமே பின்பற்றக்கூடிய ஓர் வாழ்க்கை முறையை வள்ளுவர் வகுத்துத் தந்திருப்பதால்! அது சரி, வள்ளுவரை தி.மு.க.மட்டும் தானு போற்றுகிறது? உலக அறிஞர்கள் அனைவருமே போற்றுகிறார்களே?

ஃ

தாளையூர் முருகுப்பிள்ளை,
தாழங்குடா.

கே: நான் காதலிக்கும் பெண்ணை எனது நண்பன் ஒருவன் காதலிக்கிறான். என்னால் என் காதலியை விட முடியாது. என்ன செய்யலாம்?

ப: உங்கள் நண்பரும், நீங்களும் காதலிக்கும் குறித்த பெண் யாரை காதலிக்கிறாள் என்பதை பொறுத்ததே இதற்கு விடை. நீங்கள் அதைக் குறிப்பிடவில்லையே!

ஃ

சொல்லின் செல்வன்,
கொட்டடி.

கே: எமது கேள்விகளுக்கு நீங்கள் அளிக்கும் பதில்களைப் பொன்னம்பலம் பார்த்தால் என்ன நினைப்பார்?

ப: இந்த அளவிலாவது விட்டானே என்று நினைப்பாரோ?

ஃ

க. திலகராசா,
சுண்டிக்குளி.

கே: ஒருவியாதியால் ஒருவன் துன்பப்பட்டான். கடவுளை வேண்டிக்கொண்டான். டாக்டரிடம் மருந்தும் சாப்பிட்டான். வியாதியும் குணமாயிற்று. அவன் தனது நன்றியை யாருக்குச் சொல்ல வேண்டும்?

ப: நன்றி சொல்வதிலும் கஞ்சத்தனம் ஏன்? டாக்டருக்கும் கடவுளுக்கும் சேர்த்து சொல்லிவிட்டால் போகிறது!

ஃ

து: நடராசா,
வந்தாறுமூலை.

கே: இப்போ 5 வயது தொடக்கம் 25 வயது வரையும் உள்ள குழந்தைகளும் வாலிபர்களும் எம். ஜி. ஆர். என்னும் பம்பரத்திலே நின்று சுழல்கின்றனர். இனிவரும் காலம் எப்படியாக இருக்கும்?

ப: எம். ஜி. ஆருக்கு பின் சுழல்வதற்கு அப்படியொரு பம்பரம் கிடைக்குமா என்பது சந்தேகமே!

ஃ

தமிழன்.
வெள்ளவத்தை.

கே: தமிழரசுக் கட்சி எந்த ஆண்டிலும், எம்மாதத்திலும் இலங்கை வாழ் தமிழர் மத்தியில் தோன்றியது?

ப: 1949-ம் ஆண்டு, டிசம்பர் திங்களில்!

ஃ

ஐ. நடேசன்,
ஐ. ரவிந்திரநாதன்,
மநல்லியடி.

கே: மாவட்டசபை கிடைக்காமலும் தமிழரசு அரசாங்கத்தில் ஒட்டிக்கொண்டிருக்கிறதே என்று உப-சபாநாயகர் வருத்தப்படுகிறாரே!

ப: யார் ஒட்டிக்கொண்டிருப்பது—யாருக்கு பதவி ஆசை என்பதுதான் இப்போது துல்லியமாக தெரிந்துவிட்டதே!

ஃ

ஜே. கே. முகைதீன்,
கிண்ணியா-6.

கே: ஜெய்சங்கர் நடிகைகளை திருமணஞ் செய்யமாட்டேன் என்று இருக்கின்றாரே ஏன்?

ப: ஊரிலுள்ளவியாதிகளை எல்லாம் தேடிக்கொள்ள ஜெய்சங்கருக்கு விருப்பமில்லாமல் இருக்கலாம்.

ஃ

வி. யேசுதாசன்.
மட்டுநகர்

கே: ஆண்கள் பெண்களைக் கற்பழித்தவுடன், அவர்களுக்கு நீதிமன்றத்தில் தண்டனை பெற்றுக் கொடுக்கிறார்கள். ஆனால் சில பணம் படைத்த காம வெறி கொண்ட பெண்கள் இளம் வாலிபர்களை கற்பழிப்பு முயற்சியில் ஈடுபடுத்துகிறார்களே அவர்களுக்குத் தண்டனை கொடுப்பதில்லையா?

ப: சரியாகக் கேட்டீர்கள்! அத்தகையவர்களுக்கும் தண்டனை வழங்கினால் மட்டுமே ஒழுக்கமுள்ள சமுதாயத்தை சிருஷ்டிக்கமுடியும்!

ஃ

ஸடில் ராம்,
ஆரையம்பதி.

கே: நான் ஒரு பெண்ணைக் காதலிக்கிறேன். ஆனால் அவளும் காதலிக்கிறாள். அவளுடைய பெற்றோருக்கு சம்மதம். என் பெற்றோருக்கு இக் காதலில் சம்மதம் இல்லை. இதற்கு என்னவழி செய்யலாம்?

ப: மற்றவர்களின் சம்மதமறிந்து — ஏற்படுவதல்ல காதல். காதலிக்க துணிந்த நீங்கள் பெற்றோர் சம்மதிக்கிறார்களில்லையே என்று தயங்கலாமா?

த. சண்முகராசா.
கிரான்குளம்.

கே: அறிவுக்கு விருந்தாவது திருக்குறள்; அன்புக்கு விருந்தாவது?

ப: அகநானூறு!

ஃ

வி. ஏ. செல்வநான்
திருகோணமலை

கே: திருமலையில் தமிழ்ப் பல்கலைக்கழகம் நிறுவ தமிழரசார் வேண்டிய நடவடிக்கைகளை மேற் கொள்வார்களா?

ப: நடவடிக்கை எடுத்துக் கொண்டுதானே வருகிறார்கள்?


ஃ

த. தயாளன்,
திருமலை.

கே: அடுத்த பொதுத்தேர்தலுக்கு யார் தமிழரசுக் கட்சி சார்பில் காங்கேசன் துறைத் தொகுதியிற் போட்டியிடுவார்?

ப: அதை தமிழரசுக் கட்சியின் வேட்பாளர் தெரிவுச் சபை முடிவு செய்யும்!

திருவாளர்
குயுக்தியார்
மே/பா சுதந்திரன்
194, ஏ பண்டாரநாயக்கா வீதி.
கொழும்பு-12


உலக சிறுவரில் அரைப் பகுதியினர் ஈறுவியாதிகளினுல் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பது உலக சுகாதார நிபுணர்கள் கூற்று.

அநேகம் பற்கள் ஈறுவியாதிகளினுலேயே சேதமடைகின்றன என்பது இன்றைய கண்டுபிடிப்பு. ஈறுவியாதிகள் எங்கும் பரந்து ஈறுகளை நிரந்தரமாகவே சேதமாக்குகின்றன. இதனுல் உலக சிறுவரில் அரைப்பகுதியினரும் வளர்ந்தோரில் பெரும் பகுதியினரும் பாதிக்கப்படுகின்றனர்.

ஈறுவியாதிகளை தடைப்பண்ண நிச்சயமான வழி ஈறுகளை உடனடியாக கவனிப்பதே — அதாவது போர்ஹான்ஸ் பற்பசை கொண்டு ஈறுகளை பராமரிப்பதே. போர்ஹான்ஸ் இளம் பற்கள் உரமாக வளரவும், உரம் பற்கள் இளமையுடன் நிலைக்கவும் உதவுகிறது — பற்கள் சுத்தமாகவும் வெண்ணிறமாகவும் விளங்கச் செய்கிறது.

எவ்வளவுக்கு உடனடியாக உங்கள் சிறுவரின் ஈறுகளை கவனிக்கிறீர்களோ அவ்வளவுக்கு அவர்கள் பற்கள் நீடித்திருக்கும். இன்றே அவர்களுக்கு போர்ஹான்ஸ் பற்பசை உபயோகிக்க பழக்குங்கள். போர்ஹான்ஸ் ஈறுகளை பாதுகாக்கும் விசேட மருந்துகள் கொண்டது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணம்

## தன்மானம் காத்த புனிதமான முடிவு!

திருமலை கோணேசராலயப் புனித நகர்ப் பிரச்சினையில் ஒரு பௌத்த பிக்குவின் எதிர்ப்புக்கு அடிபணிந்து இலட்சக்கணக்கான தமிழ் மக்களின் அபிலாஷையைக் குழிதோண்டிப் புதைத்துவிட்டார், இந்நாட்டின் தேசியப் பிரதமர் என்று தன்னை வர்ணித்துக் கொள்ளும் திரு. டட்லி சேனநாயக்கா.

தமிழ் மக்களின் தன்மானத்துக்கு விடுக்கப்பட்ட சவாலாக இதைக் கருதிய தமிழரசுக் கட்சி, அரசாங்கத்துடனான தனது உறவைத் துண்டித்துக் கொண்டு, பாராளுமன்றத்தில் ஓர் தனிக் குழுவாக இயங்க முடிவு செய்திருக்கிறது. தமிழரசுக் கட்சியின் பிரதிநிதியாக அமைச்சரவையில் அங்கம் வகித்துவந்த திரு. திருச்செல்வமும், தமது பதவியை துச்சமென கருதி தூர வீசியெறிந்து விட்டார்.

தமிழரசுக் கட்சி சரியான நேரத்தில் எடுத்த இச்சரியான தீர்மானத்தின் மூலம், இந்நாட்டு தமிழ் மக்களின் தன்மானம் பாதுகாக்கப்பட்டு விட்டது. இப்புனித முடிவை எடுத்த தமிழரசுக் கட்சியின் பொதுச்சபை உறுப்பினர்களை இந்நாட்டுத் தமிழ் பேசும் மக்கள் சார்பில் பாராட்டுகின்றோம்.

தமிழரசுக் கட்சி அரசாங்கத்திலிருந்து வெளியேறுவது என்று எடுத்த முடிவுக்கு விசித்திரமான காரணங்களைக் கற்பிப்பதில் மாற்றுக் கட்சிகள் முனைந்துவருகின்றன. தமிழரசுக் கட்சி அரசாங்கத்திலிருந்து வெளியேறுதா என்ற ஆவலுடன், நாக்கைத் தொங்கப் போட்டபடி டல சந்தர்ப்பங்களில் காத்திருந்தன மாற்றுக் கட்சிகள்.

ஆனால் மாற்றுக் கட்சிகளின் விருப்பப்படி ஆடுவதற்கு மறுத்துவிட்ட தமிழரசுக் கட்சி, இன்று தன்னிச்சைப்படி, அரசாங்கத்திலிருந்து வெளியேறுவது என்று எடுத்த முடிவை ஜீரணித்துக்கொள்ள முடியாமல் ஏதேதோ புலம்பி வருகின்றன.

1965 மார்ச் 25-ந் திகதி தேசிய அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு தமிழரசுக்கட்சி திரு. டட்லி சேனநாயகாவுக்கு சில நிபந்தனைகளின் பேரில்தான் ஆதரவு கொடுக்கமுன்வந்தது.

தேசிய அரசாங்கம் அமைக்கப்பட்டு மூன்றரை ஆண்டுகள் தமிழரசுக் கட்சி பொறுத்திருந்தும் அந்நிபந்தனைகளில் உருப்படியாக ஒன்றைக்கூட செயல்படுத்த அரசாங்கம் தவறிவிட்டது. எந்த விதமான அமைப்பும் இன்றி— தமிழ் மக்களின் எதிர்ப்பின் மத்தியில் திருமலைத் துறைமுகத்தை வரிந்து கட்டிக் கொண்டு தேசியமயமாக்கியது அரசாங்கம்.

அதுவும் தேசியமயமாக்க மாட்டேன் என்று தமிழரசுத் தலைவர்களுக்கு வாக்குறுதி கொடுத்து வாய்மூட முன்பே, தேசியமயமாக்கும் உத்தரவில் கையெழுத்திட்டார் பிரதமர்.

அப்பொழுதிருந்தே அரசாங்கத்தில் நம்பிக்கை இழக்கத் தொடங்கிவிட்டனர் தமிழ் பேசும் மக்கள்.

தமிழரசுக் கட்சியின் முக்கிய கோரிக்கையான மாவட்டசபை மசோதாவை பிரதமர் கைவிட வேண்டி ஏற்பட்ட அரசியல் சூழ்நிலையைக்கூட ஒருவரால் அனுதாபத்துடன் புரிந்துகொள்ள முடியும். அதனால்தான் தமிழரசுக்கட்சியும் அரசாங்கத்திலிருந்து வெளியேற அப்போது எத்தனிக்கவில்லை.

**ஆனால் திருமலை கோணேசராலப் பகுதியைப் புனித நகராக்கும் பிரச்சினையில் அப்படியொரு நெருக்கடி எதுவும் ஏற்படவில்லை. இப்பிரச்சினையில் பிரதமர்நடந்துகொண்ட தான்தோன்றித்தனமான முறை இந்நாட்டுத் தமிழ் மக்களின் தன்மானத்துக்கு விடுக்கப்பட்ட சவாலாகும்.**

**அதுவும், ஓர் பௌத்த பிக்கு எதிர்ப்பு தெரிவித்தவுடன் தமிழ் மக்களின் நியாயமான ஓர் அபிலாஷையை நிறைவேற்றுவதற்கு நியமிக்கப்பட்ட கமிஷனையே நீக்கிவிட பிரதமர் உத்தரவிட்டார் என்றால், அதன்பின்னரும், தமிழ்க்கட்சிகள் அரசாங்கத்தில் அங்கம் வகிப்பது இந்நாட்டு சிறுபான்மை மக்களின் சுயமரியாதையை குழிதோண்டிப் புதைப்பதாகவே முடியும்.**

பொறுமைக்கும் ஓர் எல்லையுண்டு. டட்லி அரசாங்கத்தில் சேர்ந்தது முதல் கடந்த மூன்றரை ஆண்டுகளாக தமிழரசுக் கட்சி பொறுமையை சற்று அளவுக்கு அதிகமாகவே கடைப் பிடித்து வந்திருக்கிறது.

---

### புனித நகர்க்கமிஷனை கலைத்ததற்கு

# பிரதமர் டட்லி கூறும் நொண்டிக் காரணம்

## தமிழர்களின் அபிலாஷைகள் பௌத்த பிக்குவின் எதிர்ப்புக்கு பலியாவதா?

திருமலை பிரெடெரிக் கோட்டையில் கோணேசராலயம் அமைந்துள்ள பகுதியைப் புனித நகராக்குவதற்காக உள்ளூராட்சி அமைச்சர் என்ற முறையில் திரு. திருச்செல்வம் நியமித்திருந்த மூவர் கொண்ட கமிஷனின் நடவடிக்கைகளை நிறுத்தி வைக்க உத்தரவிட்ட பிரதமர் அதற்குக் கூறிய காரணங்கள் இரண்டு. இந்த இரண்டு காரணங்களும், பிரச்சினையைத் தட்டிக் கழிக்கும் சாட்டுக்களாகவே காணப்படுகின்றன. ஒன்று கூட நியாயமானதாகக் காணப்படவில்லை.

பிரதமர் கூறிய காரணங்கள் இவை தான்:

(1) திருமலை பிரெடெரிக் கோட்டை இராணுவத்துக்குச் சொந்தமான இடமாக இருக்கிறது. இராணுவம்பாதுகாப்பு அமைச்சர் என்ற முறையில் பிரதமருக்குக் கீழ் வருகிறது. எனவே பிரதமரது அதிகாரத்தின் கீழ்வரும் விவகாரத்தில் தமது அதிகாரமின்றி உள்ளூராட்சி அமைச்சர் தலையிட்டது தவறு.

(2) திருமலைகோணேசராலயப் பகுதியைப் புனித நகராக்கினால் அதனால் நாட்டின் பாதுகாப்புக்கு ஆபத்து ஏற்படும்.

தமது அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தைப்பற்றி முடிவு செய்ய உள்ளூராட்சி அமைச்சர் என்ற முறையில் திரு. திருச்செல்வம் கமிஷன் ஒன்றை நியமித்தது தவறு என்ற பிரதமரின் வாதத்தை திரு, திருச்செல்வம் மறுத்துள்ளார். திருமலையைப்புனிதநகராக்கக்கோரி வந்த மகஜர்கள் பற்றி தேவையான நடவடிக்கை எடுக்கும்படி பிரதமர் எழுத்து மூலம் தமக்கு உத்தரவிட்டிருந்ததாக திரு. திருச்செல்வம் கூறியுள்ளார்.

### பாரதூரமானதா?

சரி, வாதத்துக்காக திரு. திருச்செல்வம் பிரதமரது உத்தரவின்றியே நடவடிக்கை எடுத்தார் என்று வைத்துக் கொண்டால்கூட, அக்கமிஷனின் நடவடிக்கைகளை நிறுத்தி வைக்க வேண்டிய அளவுக்கு அது எப்படி மிகப் பாரதூரமான செயலாகும் என்பது எமக்கு விளங்கவில்லை.

திரு. திருச்செல்வம், இரவோடிரவாக தான் நினைத்தபடி பிரதமர் அறியாமல் திருமலைக் கோட்டையைப் புனிதநகராகப் பிரகடனப்படுத்தியிருந்தாரென்றால் அந்த தவறு என்று கூறியிருக்கலாம். ஆனால் திரு. திருச்செல்வம் அப்படி எதுவும் செய்யவில்லை.

திரு. திருச்செல்வம் செய்ததெல்லாம் கோணேசராலயத்தைச் சுற்றி எவ்வளவு தூரம் புனித நகராக்கப்பட வேண்டும் என்று எல்லை நிர்ணயிக்க ஒரு கமிஷன் நியமித்தது மட்டுமே.

### சிங்களவருக்கும் இடம்

இந்தக் கமிஷனில் அங்கம் வகித்தவர்கள் சாதாரணமானவர்கள் அல்லர். உயர்நீதிமன்ற நீதியரசராகக் கடமை புரிந்த திரு. சிறீஸ்கந்தராசா தலைவராகவும், மற்றும் இரு இளைப்பாறிய மாவட்ட நீதியரசர்களான திருவாளர்கள் வி. கே. கந்தசாமியும் எதிரிசிங்காவும் உறுப்பினர்களாகவும் இக்கமிஷனில் நியமிக்கப்பட்டனர்.

நூற்றுக்கு நூறு வீதம் இந்துக்களுக்கு சொந்தமான கோணேஸ்வரத்தைப்புனிதநகராக்குதற்கு

(9-ம் பக்கம் பார்க்க)

ஆனால் தமிழினத்தின் சுயமரியாதையை எந்த நிலையிலும், தமிழரசுக் கட்சி விட்டுக் கொடுக்காது. எவ்வளவு கஷ்டங்கள், தொல்லைகள் ஏற்பட்டபோதும், தமிழ் மக்களின் தன்மானத்தைக் காப்பாற்றியே தீரும். இதன் முதல் நடவடிக்கையாகவே அரசாங்கத்திலிருந்து தமிழரசுக் கட்சி வெளியேறியிருக்கிறது. தேசியம் என்ற போர்வையில் தமிழ் மக்கள் ஏமாற்றப்படுவதற்கு தமிழரசுக்கட்சி ஒருபோதும் இடமளிக்காது.

கோணமாமலையிலுள்ள கோணேசராலயம் தேவாரப் பாடல்பெற்ற பழம்பெரும் பதியாகும். இவ்வாலயம் அமைந்துள்ள பகுதியை புனித நகராகப் பிரகடனம் செய்யவேண்டும் என்று இந்நாட்டுத் தமிழ் மக்கள் அனைவரும் பிரதேச, கட்சி வேறுபாடின்றி கடந்த ஐந்தாண்டுகளுக்கு மேலாக கோரிவருகிறார்கள்.

பௌத்தர்களுக்கு அனுராதபுரம் களனி, போன்றவை புனித நகரங்களாக பிரகடனம் செய்யப்பட்டன. கதிர்காமத்தையும் மகியங்கனையும் புனித நகர்களாகப் பிரகடனப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் இந்துக்கள் தங்கள் புராதன ஆலயம் ஒன்றை புனித நகராக்கும்படி கோருவதில் என்ன தவறு காண்கிறார் பிரதமர்?

உண்மையில் பிரதமரே கோணேசராலத்தை புனிதநகராகப் பிரகடனம் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக வாக்குறுதி கொடுத்திருக்கிறார். அதை நடைமுறைப்படுத்தவே எல்லை வகுக்கும் ஓர் குழுவை நியமித்தார், திரு. திருச்செல்வம்.

கோணேசராலயம் அமைந்துள்ள கோட்டையை புனிதநகராக்குவதால் இலங்கையின் பாதுகாப்புக்கு ஆபத்து என்ற பிரதமரின் வாதத்தை கேட்டு அழுவதா சிரிப்பதா என்று விளங்கவில்லை. கோட்டையின் ஓர் பகுதியை இந்துக்களின் புனிதநகராக்குவதால் எப்படி அது இலங்கையின் பாதுகாப்புக்கு ஊறு தேடுவதாகும்? கோட்டை கொத்தளம் வைத்து நாடாண்ட காலம் மறைந்துவிட்டது என்பதை பிரதமரது கவனத்துக்கு கொண்டு வருகிறோம்.

**திருமலைக் கோட்டையை இந்துக்களிடம் ஒப்படைத்தால், திருமலையை சிங்களமயமாக்கும் திட்டத்துக்கு அது ஓர் தடையாகி விடுமோ என்று பிரதமர் உள்ளூர அஞ்சி அதையே ஆபத்து என்று கூறுகிறாரா?**

தமிழரசார் வெளியேறிய பின்னர் கொழும்பில் நடைபெற்ற ஐ. தே. கட்சி கூட்டமொன்றில் பேசிய பிரதமர், தமிழரசு இருந்தாலும் சரி, போனாலும்சரி, தான் சகல இன மக்களுக்கும் நீதி வழங்கப்போவதாக கூறியிருக்கிறார்.

இப்படிப் பேசுவது பிரதமரது வழக்கமான வாய்ச் சம்பிரதாயம். வாக்குறுதிகள் அளிப்பதும் அவற்றை மீறுவதும் பிரதமருக்கு கைவந்த ஓர் கலையாகிவிட்டது. உள்ளபடியே தேசிய ஒற்றுமையைப் பாதுகாக்கும் எண்ணம் மனதில் இருந்தால், தனது தவறுக்கு கழுவாய் தேடிக் கொள்வதற்காக கோணேசராலயத்தை புனிதநகராக்க பிரதமர் உடன் நடவடிக்கை எடுக்க முன்வரட்டும்.

தவறினால், எப்படி நடந்துகொள்ளவேண்டுமென்பது தமிழ் பேசும் மக்களுக்கு நன்கு தெரியும். அதைப் பிரதமரும் அறிவார் என்று நம்புகிறோம்.

“முன்னே குளக்கோட்டன் மூட்டு
திருப்பணியை
பின்னே பறங்கி பிரிக்கவே—மன்னாகேள்
பூனைக் கண் செங்கண் புகைக்கண்ணர்
போய் மாற
மாலே வடுகாய் விடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரசு மீது அபாண்டம் கூறியோரே!

# இனி நீங்கள் சொல்லப் போவதென்ன?

## தங்குமடம்

"சுமைதாங்கி"

**வா**ங்க, இந்தப் பக்கம் எப்படியும் எட்டிப் பார்ப்பீங்கண்ணு எனக்குத் தெரியும். வந்ததுதான் வந்தீங்க சற்றுத் தாமதித்துத் தான் போங்கோவன். இரண்டு நிமிடம் சுமைதாங்கியுடன் மினக்கெடுவதால் குடியா முழுகி விடும்?

சொன்னுல் நம்பமாட்டீங்க, கடவுளிடமிருந்து எனக்கோர் கடிதம் வந்திருக்கு. என்ன அப்படிப் பார்க்கிறீங்க?

'என்னடா இது ஆச்சரியமாயிருக்கே! கடவுளாவது கடிதம் எழுதிறதாவது? இது வெறும் கப்ஸா, கடவுளுக்கும் கடிதம் எழுதியவங்களைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கோம். ஏன் அறிஞர் அண்ணு கூட ஒரு சமயம் பரமசிவனுக்குப் பகிரங்கக் கடிதம் எழுதியவர். இதுவரை பதில் கிடைத்ததாக அவர் கூறவில்லை, விஷயம் அப்படியிருக்க கடவுளே கடிதம் எழுதினுர் என்று சொன்னுல் நம்பத்தான் முடியுமா?'

இப்படியெல்லாம் நீங்க சந்தேகப்படுவீங்க என்று தெரிஞ்சுதான், கடவுளின் கடிதத்தையும் தயாராகவே இதோ வைத்திருக்கிறேன் நீங்களே படித்துப் பாருங்களேன். பொறுங்க, கொஞ்சம் பொறுங்க அதற்குமுன் ஒரு சிறு கதை சொல்றேன் கேளுங்க:

"முன்னெரு காலத்தில் ஒருநாள் ஒரு ஏழை தன் வறுமையைப் பற்றி விபரித்து கடவுளுக்கு ஒரு உருக்கமான கடிதம் எழுதினுன். இறுதியில் கடவுளை ஐம்பது ரூபா அனுப்பி வைக்குமாறு வேண்டியிருந்தான். கடவுளுக்கு விலாசமிடப்பட்ட கடிதம் தபாற் கந்தோரிலேயே கிடந்தபடியால் போஸ்ட்மாஸ்டரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. கடிதத்தைப் பிரித்துப் படித்த போஸ்ட்மாஸ்டர், மனமிரங்கி எழுதியவனுக்குப் பத்து ரூபா அனுப்பிவைத்தார்.

அதைப்பெற்றுக்கொண்ட ஏழை, கடவுள் அனுப்பிய பணத்தில் போஸ்ட்மாஸ்டர் நாற்பது ரூபாவைக் களவாடிவிட்டதாகவும் அந்தத் திருட்டுப் பயல் மூலமாக பணத்தை அனுப்பாமல் இனிமேல் தனது விலாசத்திற்கு நேரே அனுப்பி வைக்குமாறும் கடவுளுக்கு இன்னெரு கடிதம் எழுதினுன்."

சுமார் கால் நூற்றுண்டுக்குமுன், தென்னிந்திய சஞ்சிகையொன்றில் இப்படியொரு கதை படித்ததாக ஞாபகம். சென்ற மாதம் நம்ம ஊரில் இதே மாதிரி ஒரு சம்பவம் நடந்திடிச்சு. அதையுந்தான் கேளுங்களேன்.

'ஒரு பெண் தான் மிக ஏழையென்றும் வறுமையைத் தாங்கமுடியாது மிகவும் கஷ்டப்படுவதாகவும் பத்து ரூபா அனுப்பிவைக்குமாறும் கடவுளுக்குக் கடிதம் எழுதினுளாம். எந்தக் கடவுளின் ஆலயத்திற்கு அதை அனுப்பிவைப்பது என்று புரியாமல் போஸ்ட்மாஸ்டரே 'அக்சன்' எடுத்தாராம். நம்ம போஸ்ட்மாஸ்டர் ஆத்தீகர். இரக்க சிந்தையுள்ளவர். கடிதம் எழுதிய பெண்ணுக்கு இருபத்து ரூபாவை கடவுள் அனுப்பியதாக அனுப்பி வைத்தார். எழுதியது பெண்ணல்லவா? அதனுல்தான்.

அதைப்பெற்றுக்கொண்ட பெண், 'கடவுளே, ஒரு காலத்தில் நானும் ஊதாரியாகத்தானிருந்தேன். அதனுல்தான் இப்படியானேன். நீங்களாவது கவனமாக இருங்கள். கேட்டதற்கு அதிகமாகக் கொடுத்துக் கெட்டுவிடாதீர்கள்' என்று கடவுளுக்கே அறிவுரை கூறிப் பதில் அனுப்பியிருந்தாள்.

சில நாட்கள் சென்றபின் அதே பெண் பணத்திற்காகக் கடவுளுக்குக் கடிதம் எழுதினுள். அங்கே கடமையாற்றிய (நம்ம போஸ்ட் மாஸ்டர் லீவில் இருந்தபடியால்) அக்டிங் போஸ்ட் மாஸ்டர் கையில் அக்கடிதம் அகப்பட்டது. அவர் ஒரு நாத்தீகர். கடிதத்தை எழுதிய பெண்ணிற்கே திருப்பிவிட்டார். கடிதத்தைத் திரும்பப்பெற்றுக்கொண்ட பெண் இன்னெரு கடிதத்தில் 'கடவுளே, உங்களுக்குக்கூடக் கஷ்ட காலமா? அப்பவே எச்சரித்தேன். நீங்கள் என் அறிவுரையின்படி நடக்கவில்லை, அதனுல் தான் இப்போது கேட்ட தொகையைக்கூடக் கொடுக்கமுடியாமல்கஷ்டப் படுகிறீர்கள்' என்று காரசாரமாக எழுதியிருந்தாள்.

**இதை இங்கு நான் ஏன் கூறுகிறேன் என்ருல் கடவுள் தான் கடிதம் எழுதவேண்டுமென்பதில்லை. மனிதர்கள் ரூபத்திலும் கடவுளுண்டு. கடவுள் செய்யவேண்டியதை இந்த மனிதத் தேவர்களும் செய்துவிடுவதுண்டு......**

"நிறுத்து, உன் உபதேசம் எங்களுக்கு வேண்டாம். கடவுளின் கடிதம் எங்கே, அதைக் காட்டு......" என்றெல்லாம் நீங்கள் என்மேல் கோபப்படுவது தெரிவதால் இதோ நிறுத்திக் கொள்கிறேன். இன்னெரு சமயம் இந்தப் பக்கமாக வரும்போது நிச்சயமாகக் கடவுளின் கடிதத்தை நீங்களும் பார்க்கலாம்.

சும்மா சொல்லலை, உண்மையாகத்தான் சொல்றேன் நம்பினுல் நம்புங்கள், நம்பாவிட்டால் போங்கள்.

---

- "**த**மிழரசுக் கட்சி அரசாங்கத்திலிருந்து ஒரு போதுமே விலகாது. அது ஐ. தே. கட்சியுடன் சங்கமமாகி விட்டது"
- "**த**மிழரசுக்கட்சி எம். பீ. க்களில் இலஞ்சக் குற்றச்சாட்டு உண்டாம் அதனுல் தான் வெளியேற அஞ்சுகிருர்கள்"
- "**த**மிழரசுக்கட்சி முதலாளித்துவக்கட்சி; எனவே தான் யூ. என். பி. யுடன் வர்க்க ரீதியில் ஒன்ருக இணைந்திருக்கிறது. அது ஒரு போதும் விலகவே விலகாது."
- "**த**மிழரசுக்கட்சிகாரர்களுக்கு பதவி ஆசை பிடித்து விட்டது. அதனுல் தான் இன்னும் ஒட்டிக் கொண்டிருக்கிருர்கள். இன்னும் மந்திரி பதவிகள் கோருகிருர்கள்."

## மக்கள் குரல்

இதெல்லாம் என்ன என்கிறீர்களா? தமிழரசுக்கட்சி மாவட்டசபை மசோதா கைவிடப் பட்டபின்னரும் சில காலம் தொடர்ந்து அரசாங்கத்தில் இருந்து வந்த போது வெந்ததைத் தின்று வாயில் வந்ததை பேசும் அரசியற் பண்பாடற்ற—கேடு கெட்ட ஈனப்பிறவிகளும் போக்கணம் கெட்ட சில தமிழ், ஆங்கில தினசரிகளும் தமிழரசுக்கட்சிக்கு எதிராக நடத்தி வந்த பிரசார சுலோகங்களில் சில தான் மேலே தரப்பட்டிருக்கின்றன.

### இலஞ்சம்

தமிழரசுக்கட்சி அரசாங்கத்திலிருந்து வெளியேற வேண்டும் என்பதை மிகவும் ஆசையோடு ஆவலோடு எதிர்பார்த்துக் காத்துக் கிடந்த மாற்றுக்கட்சியினர் அந்த எண்ணத்தில் மண் விழுந்த ஆத்திரத்தில் அரசியல் பண்பாடுகளையெல்லாம் இழந்து வாயில் வந்தபடி தமிழரசுக்கட்சியை தூற்றினர்.

கொள்கையற்ற குத்துக்கரண கட்சியாகிய தமிழ் காங்கிரசார், இச்சந்தர்ப்பத்தைப்பயன் படுத்தி தமிழ் அரசுக்கட்சி மீது மண்ணை வாரித் தூற்றினர். பதவிப் பித்தர்கள், சுயநலக்காரர்கள், இலஞ்சம் வாங்கிகள் என்று வாயில் வந்தபடி பேசினுர்கள்.

தமிழரசுக்கட்சிப் பொதுச் செயலாளர் இலஞ்சக் குற்றச்சாட்டுப்பற்றி நிரூபிக்கும்படி சவால்விட்டபோது, பாராளுமன்றத்தில் வாய் பொத்தி மௌனம் சாதித்துவிட்டு தமிழரசுக்கட்சி அரசாங்கத்திலிருந்து வெளியேருததற்கு ஓர் இரகசியக் காரணம் இருப்பதாக 'சஸ்பன்ஸ்' வைத்துப் பேசினுர் உடுப்பிட்டி எம். பி.

### கட்சியின் முடிவு

**தமிழரசுக் கட்சியோ, தனக்கு எதிராக விடுக்கப்பட்ட இழிமொழிகளையும் ஏளனங்களையும் தாங்கிக் கொண்டது. அரசாங்கத்திலிருந்து உடனடியாக வெளியேறி எதிர்க்கட்சிகளின் திட்டம் வெற்றி பெற வாய்ப்பு அளிக்க தமிழரசுக் கட்சி மறுத்து விட்டது.**

அதே நேரத்தில் இப்பொழுது நேரமறிந்து காலமறிந்து இடமறிந்து வகையறிந்து, அரசாங்கத்திலிருந்து தமிழரசுக்கட்சி வெளியேறி விட்டது. திரு. திருச்செல்வம் தமது மந்திரி பதவியை தூக்கி எறிந்து விட்டார்.

இந்துக்களின் புனிதஸ்தலமான திருமலை கோணேசராலயம் அமைந்துள்ள பகுதியை புனித நகராக்குவதற்கு பிரதமர் கையை விரித்து விட்டதை முகாந்திரமாகவைத்தேகட்சி அரசாங்கத்திலிருந்து வெளியேறியுள்ளது.

[illegible] டைக்கடித்து மனிதனைக் கடித்தது போல இந்துத்துக்கு எதிராக பெரும்பான்மை இந்து மக்களின் அபிலாஷையை நிராகரித்த அரசாங்கத்துடன் தொடர்ந்து உறவு என்ன வேண்டிகிடக்கிறது?

இந்துக்களுக்காகப் பாடுபடுவதாக நீலிக் கண்ணீர் வடிக்கும் திரு. பொன்னம்பலம் திருமலை கோட்டையை புனித நகராக்க அரசாங்கம் மறுத்துவிட்ட பின்னரும் இன்னும் அரசாங்கத்தில்ஒட்டிக்கொண்டிருக்கிருர். தமிழரசுக் கட்சி எம். பீ.க்களோ அதை வன்மையாக எதிர்த்து அரசாங்கத்திலிருந்தே வெளியேறிவிட்டார்கள்! ஆகவே யார் இந்துக்களின் உரிமைகளைக் காப்பாற்றுவது? யார் தமிழ் மக்களின் உரிமைகளைப் பேணுவது என்பது இன்று தெரிந்துவிட்டதல்லவா?

மரமண்டைகளே! அரசியல் உலுத்தர்களே! இனி என்ன சொல்லப் போகிறீர்கள்? தமிழரசுக்கட்சிக்கு எதிராக மாசு கற்பித்த வல்லூறுகளே! முடிந்தால் ஒரு துளி விஷத்தை குடித்து சாவுங்கள்! அல்லது ஒருமுழக் கயிறுவேண்டுமா? அனுப்பி வைக்கிறேன்!

**தமிழரசுக் கட்சி இந்நாட்டுத் தமிழ் மக்களுடைய விடுதலை இயக்கம். தமிழரசுக்கட்சியை யாரும் ஏமாற்றிவிடமுடியாது. மற்றவர்கள் விரிக்கும் வலைகளிலும் கட்சி அகப்படாது. அதே நேரத்தில் சரியான நேரத்தில் சரியான முடிவெடுக்கும் ஆற்றல் நிறைந்தவர்கள் தமிழரசுக் கட்சியினர் என்பதை முழு உலகுக்கும் துலாம்பரமாக எடுத்துக் காட்டப்பட்டுவிட்டது.**


தமிழரசுக் கட்சி வெளியேறியவுடன், இலஞ்சக் குற்றச்சாட்டு யார் யாரில் சுமத்தப் பட்டிருக்கிறது என்பது தெரியவரும் என்று ஒருவார வெளியீட்டில் வீரம் பேசியிருந்த தமிழ் காங்கிரஸ் எம். பி. யே! முடிந்தால் அதைக் கூறு!

இலஞ்சக் குற்றச்சாட்டு இருப்பதால் தான் கட்சி வெளியேற வில்லையென்று கூறியகபோதிகளே! இனி உங்களின் பிரசாரம் என்ன?

வர்க்க நலனைப் பாதுகாக்கவே தமிழரசு யூ.என்.பி.யில் இருப்பதாக கூறித்திரிந்த

(7-ம் பக்கம் பார்க்க)


உன்நாட்டு உற்பத்தியைப் பெருக்கவும், வெளிநாட்டு செலாவணியை சேமிக்கவும் பாவியுங்கள்.




ராஜபீடி 'ஸ்பெஸல்'

போலிகளை வாங்கி ஏமாருதிருக்க நம்பிக்கையான வியாபாரிகளிடம் இருந்து அசல்

ராஜ பீடியை

வாங்குங்கள்

ராஜா பீடி கம்பெனி,
கொழும்பு-14.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “விட்டுக்கொடுக்கும் பண்பாடு பிரதமரிடம் அற்று விட்டது!

## அரசியல் காரணத்துக்காகவே டட்லி ஆட்சியை ஆதரித்தோம்!”

### மூதவையில் திருச்செல்வம் நிகழ்த்திய உணர்ச்சி மிகுந்த விளக்கவுரை

“தலைவரவர்களே அரசாங்கத்தின் முன்வரிசை யிலிருந்து இந்தப்பக்கம் நான்வரவேண்டியேற்பட்ட காரணத்தை உங்கள் முன்வைக்க விரும்புகிறேன்.

அதற்குமுன் இந்த நாட்டு மக்களுக்கு 1965ம் ஆண்டு மார்ச் மாதம் 24ம் திகதி இலங்கையில் உருவாகியிருந்த அரசியல் சூழ்நிலையினை நினைவூட்ட விரும்புகிறேன். அப்போது நான் சட்டத்தொழிலில் ஈடுபட்டு இருந்தேன். அதே நேரத்தில் நான் தமிழரசுக்கட்சியின் உறுப்பினனாகவும் எனது தலைவர் திரு. செல்வநாயகம் அவர்களினதும் எனது சமூக மக்களினதும் நம்பிக்கைக்குரியவனாகவும் இருந்தேன்;

இன்று இலங்கைப்பிரதமராக பதவிவகிக்கும் திரு. டட்லிசேனநாயகா அன்று 1964ம் ஆண்டு மார்ச் 24ம் திகதி பிரதமராக இருக்கவில்லை: இன்று எதிர்க்கட்சித் தலைவியாக பிரதிநிதிகள் சபையில் இருக்கும் திருமதி பண்டாரநாயகாதான் அன்றைய பிரதமராக விளங்கினார்

அன்று இந்நாட்டில் கேட்கப்பட்ட 64000 டாலர் கேள்வி என்ன வென்றால், யார் அரசாங்கத்தை அமைக்கப்போகிறார்கள் என்பதே!

அந்த நேரத்தில் தமிழரசுக் கட்சியைப் பார்த்து யாரும் சமஷ்டிக் கொள்கையை கைவிடும்படி புத்திமதி கூற முன்வரவில்லை. இந்நாட்டுப் புதினப்பத்திரிகைகள் சமஷ்டிக்கட்சி உறுப்பினர்கள் தங்கள் கொள்கையை எப்படி மாற்றிக்கொள்ள வேண்டும் என்று ஆலோசனை கூறவில்லை எங்கள் அரசியல் இலட்சியங்களைப்பற்றி யாருமே கவலைப் படவில்லை. ஆனால், அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு ஏதாவது ஒரு கட்சிக்கு ஆதரவு அளிக்க வேண்டும் என்று எம்மைத் தூண்டுவதிலே தான் அக்கறை காட்டினர்.

‘‘அதுபற்றி மேலே விபரித்துக் கொண்டு போகநான் விரும்பவில்லை. எமது கட்சி’ சகல சூழ்நிலையையும் அலசி ஆராய்ந்த பின்னர், ஜனநாயகத்தை பாது காக்கவும், தேசிய ஒற்றுமையைப்பலப்படுத்தவும் முடிவு செய்து-திரு. டட்லிசேனநாயகாவின் சொல், செயல்; கொடுத்த, வாக்குறுதியைக்காப்பாற்றும் திறமை ஆகியவற்றின் மீது நம்பிக்கை வைத்து, அவருடன் சேர்ந்து அரசாங்கம் ஒன்று அமைப்பதற்கு இணங்கியது.

நாம் திரு. டட்லிசேனநாயகாவுடன் சேர்ந்து ஒரு அரசாங்கத்தை அமைக்க எதற்காக இணங்கினோம் என்பது குறித்துநாட்டில் பலவாறான ஊகங்கள் கூறப்பட்டன.

அடிப்படையாக நாம் சில நிபந்தனைகளின் பேரில் திரு: சேனநாயகாவுடன் சேர்ந்து அரசாங்கம் அமைக்க முன்வந்த போதிலும், நாட்டின் பொது நலனில் அக்கறை கொண்டவர்களாலும், புதினப் பத்திரிகைகளாலும், சனநாயகத்துக்குஆபத்து ஏற்பட்டிருந்த நேரத்தில் திரு. டட்லி சேனநாயகாவுடன் நாம் சேர்ந்தது சரியான நடவடிக்கை யென்று உணரப்பட்டது.

எனவே நாம் இந்த நாட்டில் ஐக்கியத்தை ஏற்படுத்தவும், அரசாங்க நிர்வாகத்தின் கீழ் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள், கிறிஸ்தவர், இந்துக்கள் பௌத்தர்கள் எல்லோரும் சமவுரிமை அனுபவிக்கும்வாய்ப்பினைஏற்படுத்தவும், டட்லியுடன் சேர்ந்தோம் நாம் வாக்குறுதிகளின் அடிப்படையில் தான் அவனுடன் சேர்ந்தோம். அவ்வாக்குறுதிகளை இங்கு நான் குறிப்பிட விரும்பவில்லை: ஆனால் அவற்றில் ஒன்று மாவட்ட சபைகளை ஏற்படுத்துதல் என்பது எல்லோரும் அறிந்த ஒன்று.

கடந்த மூன்றரை ஆண்டுகளாக நாம் திரு. டட்லி சேனநாயகாவுடன் மிக நெருக்கமாக உழைத்து வந்தோம். கடந்த மூன்றரை ஆண்டுகளாக நாம் அவரது கூட்டாளிகளாக இருந்தோம்.

ஆனால், நான் சார்ந்துள்ள கட்சி கடந்த தேர்தலில் போட்டியிட்ட தொகுதிகளில் எழுபத்தைந்து வீதமான ஆசனங்களைக் கைப்பற்றியது எனது கட்சி ஒரே உள்ளமாகஐக்கியப்பட்டுள்ள கட்சி — ஒரே யொரு தலைவனால் வழி நடத்தப்படும் எனது கட்சி தமிழ் பேசும் மக்களின் நலனுக்காகவும், சனநாயக பாரம்பரியங்களுக்காகவும் தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ள எனது கட்சி—ஐ. தே. கட்சியைப் பின் பற்றும் ஒன்று என்று சிலரால் குற்றம் சாட்டப்படத் தொடங்கியது.

இதில் கொஞ்சம் கூட உண்மை கிடையாது. நாங்கள் வேறு எந்தக்கட்சியையும் பின் பற்றுபவர்களல்லர். நாங்கள் பிரதமருடன் தான் ஒத்துழைத்தோம். நாங்கள் அவருடைய கஷ்டங்களை உணர்ந்து கொண்டோம். காலப் போக்கில் எமக்கு தந்த வாக்குறுதிகளை ஒவ்வொன்றாக நிறைவேற்றுவார் என்று நம்பினோம்.

மாவட்டசபை மசோதாவைக் கொண்டுவரும் ஆற்றல் பிரதமரது கட்டுப்பாட்டுக்கு அப்பால் போனபோது பிரதமரது கஷ்ட நிலையை நாம் உணர்ந்தோம். அதற்காக நாம் அவர்மீது குற்றம் சாட்டவில்லை. வாக்குறுதியைக் காப்பாற்றத் தவறிவிட்டார் என்று பிரதமர் மீது பத்திரிகை வாயிலாக நாம் கண்டனம் தெரிவிக்கவில்லை. உண்மையில் எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் சிலர் கட்சிமீது வெறுப்புக் கொண்ட போதும், பிரதமர் மீது நாம் குற்றம் சுமத்தவில்லை.

மாறுபட்ட இரு கொள்கைகளைக் கொண்ட கட்சிகள் ஒன்றாக இணைந்து அரசாங்கத்தை நடத்தும் போதும் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்கும் நிலை இருக்க வேண்டும். அதனால் தான், மாவட்ட சபையை பிரதமர் கைவிட வேண்டியேற்பட்ட சூழ் நிலையின்பின்னும் தமிழரசுக்கட்சி தேசிய அரசாங்கத்தை தொடர்ந்து ஆதரித்து வந்தது

விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை பிரதமரிடம் அண்மைக்காலமாக மறைந்துவருகிறது. அதை இங்கு விளங்கப்படுத்துகிறேன் தேசிய அரசாங்கம் நிறுவப்பட்ட நேரத்தில் தமிழரசுக்கட்சி உறுப்பினர்களாகிய நாங்கள் ஓர் அரசியல் இலட்சியத்துக்காக எம்மை அர்ப்பணித்துக் கொண்டிருந்தோம். என்பதை நினைவுபடுத்துகிறேன். நாம் மந்திரிபதவிகளை கோரவில்லை; கூட்டுத்தாபனங்களில் டைரக்டர் பதவிகளைக் கோரவில்லை. ஸ்தானிகர் பதவிகளை கோரவில்லை;

ஒரேயொரு உறுப்பினரைக் கொண்ட கட்சியில், குறித்த உறுப்பினருக்கு மந்திரிப்பதவியும், அவரது சகோதரருக்கு ஸ்தானிகர் பதவியும், அவரது மற்றிருவருக்கு [illegible] ஒரு கூட்டுத்தாபனத்தின் தலைவர் பதவியும் அளிக்கப்பட்டன.

தமிழரசுக்கட்சி அரசாங்கத்துடன் முற்றுமுழுதாக அரசியல் காரணங்களுக்காகவே சேர்ந்தது; தமிழ் பேசும் மக்களின் நன்மைக்காகவே சேர்ந்தது.

பிரதமர் தனது வாக்குறுதிகளை நிறைவேற்ற தன்னாலியன்ற வரை முயற்சித்தார். பிரதமருக்கு புத்த குருமாராலும், எதிர்க்கட்சியினராலும், பௌத்த காங்கிரசாலும், பல தொல்லைகள் ஏற்பட்டன. எனினும், மாவட்ட சபை மசோதாவை கொண்டுவர அவர் முயற்சி செய்ததை நாம் மறக்கவில்லை;

#### கோணேஸ்வர பிரச்சினை ஆரம்பம்

திருமதி பண்டாரநாயக்காவின் ஆட்சிக் காலத்தில் உள்ளூராட்சி மந்திரியாக பதவி வகித்த திரு. எ. பி. ஜெயசூரியாவிடம் இந்நாட்டு இந்துக்களும், பௌத்தர்களும் திருமலை பிரெடெரிக்கோட்டையிலுள்ள கோணேஸ்வராலயப் பகுதியை புனித நகராகப் பிரகடனப்படுத்த வேண்டுமென்று வேண்டுகோள் விடுக்கப்பட்டது. அக்கோரிக்கை வளர்ந்து வந்த விதம் பற்றிக் குறிப்பிடுமுன்னர், கோயிலின் பெருமைகளைக் கூறவிரும்புகிறேன். திருமலைக் கோணேசர் கோயில்பற்றி சரித்திர ஆசிரியர் டெனன்ட் என்பவரே குறிப்பிட்டுள்ளார்.

கோணேசர் ஆலயவிவகாரத்தில் தலையிடுபவர் யாராக இருந்தாலும், அவர்கள் ஆண்டவனின் தண்டனையை அடைந்தே ஆகவேண்டும் என்பது வரலாறு காட்டும் உண்மை. இக்கோயில் தாக்கப்பட்ட சில காலத்தின் பின் கோயில் இடிக்கப்பட்டபின் கொன்ஸ்ரான்ரின் டீசா மறுஉகத்துக்கு அழைக்கப்பட்டார் என்பது சரித்திர பூர்வமாக எமக்கெல்லாம் தெரியும்.

அடுத்து கோணைநாதர்மீது திருஞான சம்பந்த நாயனார் பாடிய தேவாரங்களைக் குறிப்பிட விரும்புகிறேன். கிறிஸ்துவுக்குப்பின் 7ம் நூற்றாண்டில வாழ்ந்தவர் இந்தஞானி. அவர் பின்வருமாறு திருக்கோண நாதரைப்பற்றி பாடுகிறார்.

திரை கழலரவம் சிலம்பொலி
யலம்பும்
நிமலர் நீறணி திருமேனி
வரை கெழு மகளோர் பாக
மாய்ப்புணர்ந்த
வடிவினர் கொடியணி—
விடையர்
கரை கெழு சந்தும் காரகிற்
பிளவும்
அளப்பரும் கனமணி—
வரன்றி
குரை கடலோத நித்திலங்
கொழிக்கும்
கோணமாமலையமர்ந்தாரே’’

இப்படி பத்துக்கு மேற்பட்ட பதிகங்களில் கோணேஸ்வரத்தை சிறப்பித்துபாடியுள்ளார். ஆகவே பல்லாயிரக்கணக்கான வருடங்களுக்கு முன்பிருந்தே இந்தியாவிலிருந்தும், இலங்கையிலிருந்தும் பலர் யாத்திரை செய்யும் ஒரு சைவ ஸ்தலமாக இது இருந்து வருகிறது.

இலங்கைசுதந்திரமடைந்ததன் பின், அனுராதபுரம் பௌத்தர்களின் புனித நகராக்கப்பட்டது. கதிர்காமமும் மகியங்கனையும் புனித நகராக்கப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது இந்த நாட்டுத் தமிழ் மக்கள் தங்கள் பழம் பெரும் ஆலயமான கோணேசராலயப் பகுதி புனித நகராக்கப்படவேண்டு என்று ஆசைப்பட்டனர்.

இந்தக்கோரிக்கை முதன் முதலாக 1954ம் ஆண்டு நவம்பர் 11ம் திகதி சேர் கந்தையா வைத்திய நாதனால் விடுக்கப்பட்டது. அடுத்த படியாக யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை 1964ம் ஆண்டு நவம்பர் 10ம் திகதி இதே கோரிக்கையை விடுத்தது.

1964ம் ஆண்டு அக்டோபர் 19ம் திகதி அப்போது பிரதமராக இருந்த திருமதி சிறியாவிடம் யாழ்ப்பாணம் மாநகர மேயர் இதே கோரிக்கையை விடுத்தார்.

திருமதி சிறிமா ,இப்போதைய பிரதமர் போல, ‘‘இராணுவத்துக்கு சொந்தமான இடம் பிரடெரிக்கோட்டை; ஆகவே அதை புனித நகராக்க முடியாது’’ என்று கூறவில்லை. அது குறித்து வேண்டிய நடவடிக்கையெடுக்கும் படி அப்போதைய உள்ளூராட்சி மந்திரி ஏ. பி ஜெயசூரியாவுக்கு உத்தரவிட்டார்.

பிரெடெரிக் கோட்டையைப் புனித நகராக்குவதால் இலங்கையின் பாதுகாப்புக்கு ஆபத்து என்று திருமதி சிறிமா கூட கருதவில்லை.

1964ம் ஆண்டு நவம்பர் 23ம் திகதி குருநாக்கல் நகர மேயர் திரு. வெலகெதர திருமலை கோணேசராலயத்தை புனித நகராக்கக் கோரினார். இதைத்தொடர்ந்து மட்டுநகர் நகரசபைத் தலைவரும் கோரிக்கையை விடுத் திருந்தார்.

திருமதி சிறிமாவின் உத்தரவுப்படி அப்போதைய உள்ளூராட்சி அமைச்சர் திரு. ஏ. பி. ஜெயசூரியா, கோணேஸ்வர ஆலயப் பகுதியை புனித நகராக்குவது குறித்து ஓர் மாநாட்டைக் திருமலையில் கூட்டினார். அதில் திரு. ஜெய சூரியாவுடன் அப்போதைய பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் நிரந்தரக் காரியதரிசியும் கலந்து கொண்டார். அம்மாநாட்டில் புனித நகராக்குதல் நாட்டின் பாதுகாப்புக்கு ஆபத்து ஏற்படுத்தும் என்று யாரும் குறிப்பிடவில்லை. அடுத்து தேசிய அரசாங்கம் என்று கூறப்படும் இந்த அரசாங்கம் அமைக்கப்பட்டபின்னர் நடந்தவைகளைக் கூற விரும்புகிறேன்.

—தொடரும்

## சம்பந்தர் தேவாரம் பாடிய புனித ஸ்தலம் கோணேஸ்வரம்!

கீழ் கண்ட இடங்களுக்கு சுதந்திரன் விற்பனையாளர்கள் தேவை

காங்கேசன்துறை
முள்ளியவளை
கொட்டகலை
நிந்தவூர்
பசறை
மஸ்கேலியா

விபரங்கட்கு
சுதந்திரன் விநியோக அதிபர்
த: பெ: இல 1183
கொழும்பு-12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போராடத் தயாரா?

டேய், உன்னைத் தானே, வாடா. இங்கே என்னடா திரும்பிப் பார்க்காமலே நடையைக்கட்டுறே! ஏண்டா பேசமாட்டேங்கிறே! என்னவோ பெரிய வீருப்போடு பேசித்திரிந்தியே! இப்பபேசண்டா லஞ்சம் வாங்கிறுங்க வெளியேறமாட்டாங்க, வெளியேறினுல் தானுக உண்மை தெரிந்துவிடும், அது இதுவென்று வாய்க்குவந்தபடிஏதோ வெல்லாம் உளறினியே இப்ப என்னடா சொல்றே? நீயும்போராடத்தயாரா;

''...........?...........''

ஏண்டா பேசமாட்டேங்கிறே! நில்லடா எங்கே ஓடப்பார்க்கிறே. இப்பவாவது புரிஞ்சுக்கோ தமிழரசுத்தலைவர்கள் அப்பழுக்கற்ற நேர்மையான வீரர்கள். அவர்களின் ஒரே நோக்கம் தமிழ்பேசும் மக்கள் இந்நாட்டில் தலை நிமிர்ந்து வாழ வழிவகை செய்வதே. அதற்காக எதுவும் செய்யத் தயங்க மாட்டார்கள். கேவலம் பதவியும் பட்டமும் அவர்கள் கால் தூசு.....''

'போதுமப்பா போதும்... என்னை மன்னிச்சுடுங்க... நானும் தமிழரசுத் தொண்டனுகத் திரும்பவும் சேர்ந்து கொள்கிறேன்'

இஃது ஒரு தந்தைக்கும் மகனுக்கும் நடந்த பேச்சு வார்த்தையின் ஒரு பகுதி. இடமின்மையால் மிகுதி தரப்படவில்லை.

—

## ஏனிந்த இரட்டை வேடம்?

''கோணேஸ்வர ஆலய பகுதியை புனித பிரதேசமாக்குவதற்கு நியமிக்கப்பட்ட கமிட்டியை கலைத்ததால், அரசாங்கம் இந்து மதத்துக்கு விரோதமானது என்று எவரும் தீர்மானித்து விடக்கூடாது.

''பிரெடெரிக் கோட்டையில் இலங்கைக் கடற்படை நிலை கொண்டுள்ளது. அத்துடன்பிரதமரின் அதிகாரத்தின் கீழ்தான் இப்பிரதேசமும் உள்ளது. அப்படியிருக்க அவரின் கருத்தையறியாது திரு. திருச்செல்வம் ஓர் கமிட்டியை நியமித்தது முறையற்ற செயல் தானே?,,


—இவ்வாறு தமிழ் காங்கிரஸ் தலைமைப்பீடம் வெளியிட்டுள்ள அறிக்கை கூறுகிது.

—(தினபதி 16 .9.68)

''பிரதமர் திரு. டட்லி சேனநாயகா தனது அருமைத்துனர் திரு. ஆர்.ஜி. சேனநாயகாவின் ஆலோசனையைக்கேட்டு கோணேஸ்வர ஆலயத்தை புனித நகராக்குவது குறித்து ஆலோசிக்க நியமிக்கப்பட்ட குழுவை நிராகரித்துள்ளமை தமிழ் மக்கள் அனைவருக்கும்பெரும் அவமதிப்பை ஏற்படுத்தியுள்ளது.''

—இவ்வாறு நெடுந்தீவில் நடைபெற்ற தமிழ் காங்கிரஸ் கூட்டமொன்றில் பேசிய தமிழ் காங்கிரஸ் தலைவர் திரு.ஜீ ஜீ. பொன்னம்பலம் குறிப்பிட்டார்.

— வீரகேசரி (17-9-68)


## வீடுகளுக்கு தேவையான யூனியன் பித்தளை இணைப்பு சாதனங்கள் ஏகவினியோகஸ்தர்கள்

1. சிற்றி பேக்கரிஅன்ட்ஸ்டோர்ஸ், பிரதான வீதி, அம்பாறை.
2. கொம்மேர்சியல் கொம்பனி 127, பிரதான வீதி பண்டாரவளை.
3. மகாஜன வெலந்தஹாலா, 77. பழைய தங்காலை வீதி, பதுளை.
4. ஜெனரல் ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ், 37, பிரதான வீதி, பதுளை.
5. அசீஸ் ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ், வடகரை வீதி, திருமலை.
6. என். எச். எஸ். மொஹிதின் அன்கோ, பசார் வீதி, குருநாக்கல்,
7. கே. இப்ராகிம் சாய்பு அன்கோ, இல 2, பிரதான வீதி, ஹப்புத்தளை.
8. எம். பி. சி. எஸ். யூனியன், திருகோணமலை வீதி, மாத்தளை.
9. நபீஷா அன்கோ, 86, பிரதான வீதி, பலாங்கொடை,
10. கே. ஏ. எஸ். மொகமெட் அன் பிறதேஸ், பெரியகடை, மன்னர்.
11. பி. எஸ். மொகமெட் அன் பிறதேஸ், பஜார் வீதி, வவுனியா.
12. எம். பி. சி. எஸ். யூனியன், பிரதான கரை வீதி, சாவகச்சேரி.
13. குணரத்தின ஸ்ரோர்ஸ், 57 A, தங்கதர வீதி, காலி.
14. மஜீதியா ஸ்டோர்ஸ், 35. மெயின் வீதி,
15. எஸ். எஸ். எம். சொலுக்கார் & சன்ஸ், 52, பசார் வீதி, மட்டுநகர்.
16. ராஜா ட்ரேடிங்க கோப்பரேசன், கொழும்பு வீதி, கண்டி.
17. ஈஸடேன் ஹாட்வெயர்ஸ், மெயின் வீதி, அட்டன்
18. எம். வை. இப்ராகிம் சாய்போ & கோ மெயின் வீதி, நுவரெலியா.
19. எம்.வை.ஹேமச்சந்திரா&கோ (மேர்ச்சண்ட்ஸ்) லிமிட் பிரதான வீதி தலவாக்கொல்லை.
20. என். எம். கே. கே. ஸ்ரோர்ஸ், 107-108, வங்கி சைட், புதுடவுன், அனுராதபுரம்.
21. சுவுந்தரத்தின & பிறதேஸ், வலன் முல்ல ரோட், பெலியத்த.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்னைக் கடிதம்

# தமிழ் நாட்டில் மீண்டும் இந்திப் போர் மூழ வித்திடுகிறது டெல்லி மத்திய ஆட்சி!

## தமிழா! உன்னைத்தான்! உண்மை நிலவும்படி செய்!

தமிழா பயப்படாதே, ஊர்தோறும் தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் போட்டு ஐரோப்பிய சாஸ்திரங்களை எல்லாம் தமிழில் கற்றுக்கொடுக்க ஏற்பாடு செய்.

ஜாதி வேற்றுமைகளை வளர்க்காதே. 'ஜாதியிரண்டொழிய வேறில்லை' என்ற பழந்தமிழ் வாக்கியத்தை வேதமாகக் கொள்.

பெண்ணை அடிமை என்று கருதாதே. முற்காலத்துத் தமிழர் மனைவியை 'வாழ்க்கைத் துணை' என்றார். ஆத்மாவும் சக்தியும் ஒன்று. ஆணும் பெண்ணும் சமம்.

தமிழா, உனது வேலைகள் அனைத்திலுமே பொய்க்கதைகள் மிதமிஞ்சிவிட்டன. உனது மதக் கதைகள் லௌகிக கொள்கைகள், வைதிக நடை எல்லாவற்றிலுமே பொய்கள் புகுந்து தலைதூக்கி ஆட, இடங்கொடுத்துவிட்டாய். இவற்றை நீக்கிவிடு. வீட்டிலும் வெளியிலும் தனிமையிலும் கட்டிடத்திலும் எதிலும், எப்போதும் நேர்மையிருக்க வேண்டும். நீயும் பிறரை வஞ்சிக்கலாகாது. பிறரும் உன்னை வஞ்சிக்கலாகாது. பிறர் பிறரை வஞ்சிப்பதை நீ இயன்றவரை தடுக்கவேண்டும். எல்லாப் பேறுகளைக் காட்டிலும் உண்மைப் பேறுதான் பெருமை கொண்டது. உண்மை தவங்களுக்கெல்லாம் உயிர். உண்மை சாஸ்த்திரங்களுக்கெல்லாம் வேர், உண்மை இன்பத்திற்கு நல்லுறுதி. உண்மை பரமாதமாவின் கண்ணுடி ஆதலால் தமிழா, எல்லாச் செய்திகளிலும் உண்மை நிலவும்படி செய்.

உன்னுடைய ஆத்மாவும் உலகத்தினுடையவும் ஆத்மாவும் ஒன்று. நீ, நான், முதலை, ஆமை, ஈ, கருடன், கழுதை எல்லோரும் ஒரே உயிர். அந்த உயிரே தெய்வம்.

ஒருவன் கலியை உடைத்து நொறுக்கினால், அவனைப் பார்த்துப் பத்துப்பேர் உடனே நொறுக்கிவிடுவார்கள். இங்ஙனம், ஒன்று, பத்து, நூறு, ஆயிரம், லட்சம், கோடியாக மனித ஜாதியில் ஸத்யயுகம் பரவுதலடையும் காலம் ஏற்கனவே ஆரம்பமாய்விட்டது. இதில் சந்தேகம் இல்லை.

நான் அமரன், எனக்குச் சாவு கிடையாது. நாழிகைகள் ஒழிக, நாட்கள் ஒழிக, பருவங்கள் மாறுக, ஆண்டுகள் செல்க, நான் மாறுபடமாட்டேன். நான் எக்காலமும் உறுதியாகவும் ஸ்திரமாகவும் இருப்பேன். என்றும் உயிர் வாழ்வேன். எப்போதும் ஸத்யமாவேன். எப்போதும் களித்திருப்பேன். இதையெல்லாம் நான் உறுதியாகத் தேர்ந்து கொண்டேன், இஃதெல்லாம் உண்மையென்று அறிவேன்.

நான் கவலையை ஒழித்தேன். ஆதலால் எப்போதும் வாழ்வேன். ஆதலால் கவலையை விட்டேன். கவலையாலும் பயத்தாலும் மரணமுண்டாகிறது. கவலையும் பயமும் பகைவர். நான் இப் பகைவரை வென்று தீர்த்தேன். ஆதலால் மரணத்தைவென்றேன். நான் அமரன்.

—சுப்பிரமணிய பாரதி

## "தமிழ்நாடே அழிந்தாலும் இந்தியை எதிர்ப்போம்"

—எம். ஜி ஆர்

### காமராசருக்கெதிராக கோஷ்டி சேர்க்கிறார் பக்தவச்சலம்!

தமிழகத்தில் மீண்டும் இந்தி எதிர்ப்புப் போர் ஒன்று ஆரம்பிக்கப் படுவதற்கான சூழ்நிலையை டெல்லி மத்திய ஆட்சி ஏற்படுத்திவருகிறது. தமிழ் நாட்டு மக்களின் விருப்பத்துக்கு இணங்க தமிழ், ஆங்கிலம்— இரண்டும் கொண்ட இருமொழிக் கொள்கையை தமிழ் நாடு அரசாங்கம் ஏற்று செயல்படுத்தி வருவது தெரிந்ததே.

தமிழ்நாடு அரசாங்கத்தின் இரு மொழிக் கொள்கையால், தமிழ் நாட்டிலிருந்து இந்தி முற்றாக அகற்றப் பட்டுவிட்டது. பாடசாலைகளில் இந்திப் போதனை நிறுத்தப்பட்டுவிட்டது.

இதைச் சகித்துக்கொள்ள முடியாத டெல்லி அரசாங்கம், தனது செலவில் தமிழ் நாட்டில் 360 இந்திப் பள்ளிக்கூடங்களை நிறுவ முடிவு செய்திருக்கிறது. சனநாயகத்துக்கு முரண்பட்ட இம் முடிவினால், தமிழக மக்கள் கொதிப்படைந்துள்ளனர். இதன் காரணமாக மீண்டும் தமிழ் நாட்டில் இந்தி எதிர்ப்புப்போர் வெடிக்கக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டுவருகிறது.

அண்மையில் சென்னை மணவழகர் மன்றத்தின் விழாவொன்றில் பேசிய தி. மு. க. பிரமுகர்கள், தமிழ் நாடே அழிந்தாலும்சரி, இந்தியை எதிர்த்துப் போராடுவோம் என்று முரசறைந்திருக்கிறார்கள்.

**எம். ஜி. ஆர். எச்சரிக்கை**

இவ்விழாவில் பேசிய திரு. எம். ஜி. இராமச்சந்திரன் இதுபற்றி பின்வருமாறு எச்சரிப்பு விடுத்தார்:

'பெருவாரியான தமிழ் மக்களின் நல்லாதரவைப் பெற்று ஜனநாயக அரசியலில் அதிகாரத்தில் உள்ளது திராவிட முன்னேற்றக் கழகம். தமிழ் மக்களுடைய விருப்பத்தினடிப்படையில் கழக ஆட்சியில் நிறைவேற்றி அனுப்பப்பட்ட இருமொழித் தீர்மானத்துக்கு எதிராக தமிழ்நாட்டில் 360 இந்திப் பள்ளிகளைத் திறப்போம் என்று மத்திய அரசு சொல்லுவதானது எந்த தருமத்திற்கு — எந்த நியாயத்திற்குப் பொருந்தும்?

''செக் நாட்டின் மீது ரஷியா படையெடுப்பு நடத்தியதற்கும், காஷ்மீரத்துக்குள் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு நடத்தியதற்கும், மத்திய அரசின் இந்த அறிவிப்புக்கும் என்ன வித்தியாசம்? மக்கள் உரிமையை அழிக்கும் இச்செயலை, ஜனநாயகத்தைப் பழிக்கும் இச்செயலை தமிழ் மக்கள் ஒரு நாளும் சகிக்கமாட்டார்கள்.'

''தமிழ் மக்கள் விருப்பத்துக்கொப்ப இங்கே தமிழும் ஆங்கிலமும் போதுமென்று தீர்மானம் நிறைவேற்றி அனுப்பிய பின்னர் மத்திய அரசு அதை மதியாமல் இங்கு 360 இந்தி மொழிப் பள்ளிகளைத் திறக்கப்போவதாகக் கூறுமானால் அது என்ன விரும்புகிறது? ஜனநாயகத்தையா அல்லது சர்வாதிகாரத்தையா?

இதைவிட ஜனநாயகக் கேலிக்கூத்து ஒன்று இருக்க முடியுமா? இவ்வாறு மக்கள் உரிமையை-ஜனநாயகத்தை மத்திய அரசு பழித்து அழிக்க முற்படுமானால் மக்கள் மன்னிக்கமாட்டார்கள். தங்கள் ஜனநாயக உரிமையைக் காக்கக் கிளர்ந்தெழுவார்கள். அன்றும் ஜனநாயகத்தைக் காத்திடுவதில் தி. மு. கழகம் முன்னணியில் நிற்கும்.

சர்வாதிகாரத்தைநோக்கி எங்களைத் தள்ளாதீர்கள். சர்வாதிகாரிகளாக மாறும் அகம்பாவமோ-ஆணவமோ எங்களுக்குக் கிடையாது. எனவே மத்திய அரசு தன் அராஜகப் போக்கை அகற்றி ஜனநாயகத்தைக் காக்கும் என்று நம்புகிறேன்.

### தமிழ் நாடு காங்கிரஸ் பிளவு; 'இம்மத்' கருத்து

தமிழ்நாடு காங்கிரசில் ஏற்பட்டுக்கொண்டுவரும் பிளவுகள் பற்றி ஹிம்மத் வார ஏட்டில் அதன் தமிழகச் செய்தியாளர் டி. எஸ். ராமானுசம் எழுதியுள்ளதாவது:

''காமராசரைப் பற்றியும் அவருடைய தோழர்கள் பற்றியுமான குறைபாடுகள் அனைத்தையும் மக்கள் மத்தியில் வைக்கவும், அதன் மூலம் காமராசரைக் குருட்டுப் போக்கில் வழிபடும் நிலைமையைப் போக்கவுமான நடவடிக்கைகளுக்கு முன் [illegible] ஆதரவு திரட்டுகிறார்.

'காமராசர் அரசியலிலிருந்து ஓய்வு பெற்றுக் கொள்ளவேண்டும் அவரது ஆதரவாளர்கள் தமிழ்நாடு காங்கிரசிலிருந்து விலகிக் கொள்ளவேண்டும்' என்று அவர்கள் கோரிக்கைவிடுத்து வருகின்றனர். சி. சுப்பிரமணியத்தின் கை ஓங்க வேண்டுமென்பது அவர்கள் அவா.

இதில் மிகவும் வேடிக்கையான விஷயம் என்னவென்றால் ஒருபுறம் காமராசர் தமக்கு எதிரானவர்களை ஒழித்துக் கட்டுவதற்குக் கோஷ்டி சேர்த்து வருகிறார்:

இன்னொருபுறம் பக்தவத்சலம் போன்றவர்கள் காமராசரை வீழ்த்தி அரசியலிலிருந்தே வெளியேற்றுவதற்கான முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள்,

ஒருவருக்கொருவர் தரக்குறைவான வாதங்களைக் கூறுவதும், ஒருவர்பற்றி மற்றவர் தமக்குத் தெரிந்த இரகசியங்கள் எனப்பட்டவற்றை கூலி எழுத்தாளர்களைக் கொண்டு வெளியிட்டு வருவதும் தமிழ்நாடு காங்கிரசுக்காரர்களின் நடைமுறையாகிவிட்டது.

காங்கிரசுக்காரர்களிடையே இதுவரை வெளியிடப்படாமல் மறைந்து கிடந்த தப்பெண்ணங்களும் தகராறுகளும் இப்போது வெளிக் கிளம்பிக் கொண்டிருக்கின்றன. இனி தமிழ் நாடு காங்கிரசின் கதி என்னவாகும் என்பது இன்னும் சில வாரங்களில் தெரிந்துவிடும்.

## வவுனியாத் தொகுதியில் சிங்களவர்களின் அத்துமீறல் குடியேற்றம் அதிகரிப்பு!

### நடவடிக்கை எடுக்கும்படி சா. ஜே வே. யிடம் வேண்டுகோள்!

''திட்டமிடப்பட்ட குடியேற்றங்களிலும் பார்க்க அத்துமீறிய குடியேற்றங்களால் எமக்கு என்றுமே ஆபத்துக்கள் நிறைந்துள்ளன. இவற்றைத் தடைசெய்ய எமது இயக்கமான தமிழரசுக் கட்சி தீவிர நடவடிக்கை எடுக்கவேண்டும். வவுனியாத் தொகுதியில் இன்று ஏகப்பட்ட சிங்களக் குடியேற்றங்கள் அத்துமீறி நடக்கின்றன. இவற்றை நாம் பார்த்துக் கொண்டு இருப்போமானால் கண் இருந்தும் குருடர்களாக வாழ்பவர்களின் நிலையே நமக்கு. எனவே எமது கட்சியினர் இவ்விஷயத்தில் அதிக சிரத்தை எடுத்து வவுனியாத் தொகுதி சிங்களப் பிரதேசமாக மாறும் ஆபத்தில் இருந்து காப்பாற்ற உதவ வேண்டும்.

இவ்வாறு, வவுனியாத் தொகுதி நெடுங்கேணியைச் சேர்ந்த திரு. த. ம. பீற்றர் பொன்கலன்ட் (கிருபை) அவர்கள் தமிழரசுத் தந்தை திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் அவர்களிடம் உருக்கமான வேண்டுகோள் விடுத்தார்.

இவ்விடயம் பற்றி திரு: பீற்றர் பொன்கலன்ட் அவர்கள் நமது நிருபரிடம் தெரிவித்ததாவது:

'வவுனியா பாராளுமன்ற உறுப்பினரும், தமிழ் காங்கிரஸ் பிரதிநிதியுமான திரு. தா. சிவசிதம்பரம் அவர்கள் இவ்விஷயத்தில் பாராமுகமாக இருக்கின்றார். காரணம், அவர் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்படுவதற்கு சிங்கள மக்களின் வாக்குகளே பெரும் உதவியாக இருந்து வருவதாக கூறப்படுகின்றது. சிங்கள மக்கள் வவுனியாத் தொகுதியில் அத்துமீறிக் குடியேறுவதைத் தடைசெய்ய நடவடிக்கை எடுத்தால் சிங்கள மக்களின் வாக்குச் சீட்டுகள் தமக்கு இல்லாமல் போய்விடுமோ என்ற அச்சத்தினால் தான் திரு. தா. சிவசிதம்பரம் இவ்விஷயத்தில் பாராமுகமாக இருக்கின்றாரா என்று வவுனியா மக்கள் கேட்கிறார்கள்.

——

### வண்ணார்பண்ணை தமிழரசு வாலிப முன்னணி

மேற்படி கிளையின் ஆண்டுக் கூட்டம் கடந்த வாரம் நடைபெற்றபோது, புது வருட உத்தியோகஸ்தர்களாகத் தெரிவுசெய்யப் பட்டவர்கள் விபரம் பின்வருமாறு:-

தலைவர் எஸ். கே, சண்முகநாதன், செயலாளர் ந: சந்திரமோகன், பொருளாளர் கே. நித்தியானந்தன்:

நிர்வாக சபை உறுப்பினர்களாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

எஸ். பி. மதிமுகராசா, தி. முருகமூர்த்தி, மு. சிவக்குமார், து. மகாலிங்கம்.

——

### வன்னியசிங்கம்வீதி

தெல்லிப்பழைக் கிராம சபை எல்லைக்குள் உள்ள கொல்லங்கலட்டி வீதிக்கு ''குமாரசுவாமி வீதி'' எனவும், தெல்லிப்பழைச் சந்தியிலிருந்து மாவிட்டபுரம் சந்தி வரையும் உள்ள பொது மராமத்துப் பகுதிப் பிரதான வீதிக்கு ''அமரர் வன்னியசிங்கம் வீதி'' எனவும் பெயரிடத் தெல்லிப்பழைக் கிராமசபை பரிசிலனை செய்துவருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களின் மத உணர்ச்சியையும் புண்படுத்தி விட்டார் இலங்கைப் பிரதமர்

## அப்படிப்பட்டவருடன் தமிழரசு எப்படி உறவு வைக்க முடியும்?

### "இந்தியன் எக்ஸ்பிரஸ்" கருத்து!

"தமிழர்களின் மத உணர்ச்சிகளைத் தொடும் விவகாரத்தில்கூட இலங்கைப் பிரதமர் சிங்கள வெறியர்களினதும் பௌத்த பிக்குகளினதும் அச்சுறுத்தல்களுக்கு சரணாகதியடைய ஆரம்பித்து விட்டார். இப்படியான நிலையில் அரசாங்கத்திலிருந்து வெளியேறுவது தவிர தமிழரசுக் கட்சிக்கு வேறு வழியே இல்லை.

இவ்வாறு சென்னையிலிருந்து வெளிவரும் இந்தியன் எக்ஸ்பிரஸ் ஏடு இலங்கை அரசியல் பற்றி எழுதியுள்ள செய்தி விமர்சனம் ஒன்றில் கருத்து வெளியிட்டுள்ளது.

அதில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

'பிரட்ரிக் கோட்டை விவகாரம் எப்படிப் பார்த்தாலும் இலங்கைத் தமிழர்களுக்கு மிகவும் முக்கியமான ஒரு விவகாரமாகும். எனவே தமிழரசுக் கட்சியின் நடவடிக்கைக்கு அரசியல் காரணம் கற்பிப்பது சரியல்ல!

மாவட்டசபைகள் அமைப்பது என்ற தனது வாக்குறுதியை பிரதமர் திரு. டட்லி சேனநாயகா நிறைவேற்றத் தவறியபின் தமிழரசுக்கட்சி அவரது கூட்டரசாங்கத்தில் தொடர்ந்து பங்காளியாக இருந்தது. ஆனால் மகிழ்ச்சியுடன் இருக்கவில்லை.

இந்த மாவட்டசபைகளை நிறைவேற்றியிருந்தால் மத்திய அரசாங்கத்தின் அதிகாரங்களுக்கு பங்கம் இல்லாத வகையில் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு ஓரளவு சுயாட்சி கிடைத்திருக்கும்.

இதை அடுத்து தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்கள் பலர் அரசாங்கத்தில் இருந்து வெளியேறுமாறு அதை வற்புறுத்தினார்கள். ஆனால் தமிழர்களுக்கு எதிரான சுதந்திரக் கட்சியும் அதன் கூட்டாளிகளும் ஆட்சிக்கு வந்துவிடக் கூடும் என்று தமிழரசுக் கட்சி அரசாங்கத்தில் தொடர்ந்து இருந்து வந்தது.

ஆனால் தமிழர்களின் மத உணர்ச்சிகளைத் தொடும் ஒரு விவகாரத்தில்கூட பிரதமர் சிங்கள நலன்களுக்கு சரணாகதி அடைந்துவிட்டதால் தமிழரசுக் கட்சிக்கு வெளியேறுவதைத் தவிர வேறு வழி தென்படவில்லை என்பது புலனாகிறது.

இனி தமிழரசுக் கட்சி தமிழர்களின் நலன்களுக்கு குந்தகம் விளைவிக்கா[illegible] விஷயங்களில் அரசாங்கத்தை ஆதரிக்கும். ஆனால் அரசாங்கத்தை இந்தக் கட்டத்தில் கவிழ்க்க உதவ முன்வராது என்று தெரிகிறது. அப்படி கவிழ்க்க உதவுவது அதன் நலன்களுக்கு உகந்தது அல்ல.

## ஜீ. ஜீ....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கோணசராலய புனித நகர்ப் பிரச்சினையில் தமிழரசுக் கட்சியைப் பின்பற்றி அரசாங்கத்திலிருந்து வெளியேறியிருக்கலாமே!

''உண்மையில் தமிழர்களின் ஐக்கியத்தில் திரு. பொன்னம்பலத்துக்கு நாட்டம் இருக்குமானால் திருமலை புனித நகர்ப் பிரச்சினையில் அதைச் செயலில் காட்ட நல்லதொரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

''தமிழரசுக் கட்சியைப் பின்பற்றி— தமிழர்களின் ஒற்றுமையை எடுத்துக் காட்டும் முறையில் அரசாங்கத்திலிருந்து திரு. பொன்னம்பலமும் அவரது இரு சிவசிதம்பரங்களும் விலகத்தயாரா?''

இவ்வாறு கொழும்பிலுள்ள தமிழ்ப் பிரமுகர் ஒருவர் சுதந்திரன் மூலம் தமிழ் காங்கிரஸ் தலைவருக்கு சவால் விட்டுள்ளார்.

## பிரதமர் டட்லி கூறும்...

(4-ம் பக்கம் தொடர்ச்சி

எல்லை வகுக்க நியமிக்கப்பட்ட கமிஷனில்—திருமலைப் பகுதியில் உள்ள பௌத்தர்களின் மனம் நோகாமலிருக்கவும் அவர்களது அபிப்பிராயங்களைக் கேட்டறிவதற்குமாக -ஓர் சிங்கள பௌத்தருக்குகூட திரு. திருச்செல்வம் இடமளித்திருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

கமிஷன் நியமிக்கப்பட்டதும், ஏதோ ரகசியமாக நிகழ்ந்தசெயலல்ல. முறைப்படி அரசாங்க வர்த்தமானி மூலம் அது பகிரங்கப்படுத்தப் பட்டது.

ஒரு கமிஷன் நியமிக்கப்படுவதன் நோக்கமே குறிப்பிட்ட பிரச்சினையில் சகலரது கருத்துக்களையும் சாங்கோபாங்கமாக விசாரித்தறிவதே. திருமலைப் புனிதநகர்ப் பிரச்சினையில் நியமிக்கப்பட்ட கமிஷனிடம், புனித நகர்த் திட்டத்தால், இலங்கையின் பாதுகாப்புக்குக் குந்தகம் விளையும் என்று கருதியிருந்தால் திரு. டட்லி சேனநாயக்கா கூட சாட்சியமளித்திருக்கலாம்.

அத்துடன் திரு. திருச்செல்வம் நியமித்த கமிஷனில் அங்கத்துவம் வகித்தவர்கள் சாதாரண ஏனோதானோக்களோ அல்ல. இந்நாட்டில் பெரும் பதவி வகித்தவர்கள் அவர்கள்.

இந்நாட்டின் பாதுகாப்பில் பிரதமருக்கு உள்ள அதே அளவு ஆர்வம் அவர்களுக்குமுண்டு உண்மையிலே புனிதநகராக்குவதனால் நாட்டின் பாதுகாப்புக்கு ஆபத்து ஏற்படுமென்றால் அதையும் தங்கள் அறிக்கையில் அவர்கள் வெளியிடத் தயங்கியிருக்கமாட்டார்கள்.

இந்துக்களின் புனித நகராக திருமலை கோணேசராலயத்தை சுற்றியுள்ள பகுதிகளை பிரகடனம்செய்வதால், நாட்டின் பாதுகாப்புக்கு எந்த விதத்தில் ஆபத்து ஏற்படும்? பிரதமர் ஏன் அதை விளக்க வில்லை?

நாட்டின் பாதுகாப்புக்கு ஆபத்து ஏற்படும் என்றால், முன்பு புனித நகராக்குவதற்கு பிரதமர் சம்மதம் தெரிவித்ததேன்?

இந்நாட்டிலுள்ள பெரும்பான்மைத் தமிழர்களின் அபிலாஷைகளை விட ஒரு பௌத்தபிக்குவின் எதிர்ப்பே பிரதமருக்கு பெரிதாகிவிட்டது. இத்தகைய மனப்பான்மையுள்ளவரிடம் தமிழ் மக்கள் இன்னும் எப்படி நம்பிக்கை வைக்க முடியும்?

பிரதமரது சாட்டுக்களால் எவ்வித பிரயோசனமுமில்லை. உண்மையில் அவருக்கு சிறுபான்மை மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதில் அக்கறையிருந்தால் திருமலை கோணேசராலயப் பகுதியை புனித நகராகப் பிரகடனப்படுத்த நடவடிக்கையெடுக்க முன்வரட்டும்.

## தமிழ்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி

தமிழரசுக் கட்சி வெளியேறியது குறித்து தமிழரசாருக்கு முந்திக்கொண்டு புத்தி சொல்ல வரும் இத்தினசரிகள் கோணேஸ்வரப் பிரச்சினையில் மௌனம் சாதிப்பதேன்?

தமிழ் மக்களிடம் விற்பனையைப் பெருக்கி பணம் சேர்ப்பதிலும் தமிழ் மக்களின் ஒற்றுமையை சிதறடிக்கும் செய்திகளை பிரசுரிப்பதிலும் முன்னுக்கு நிற்கும் சிங்கள முதலாளிகளுக்கு சொந்தமான தமிழ் தினசரிகள் தமிழ் மக்களின் கோரிக்கைக்காக குரல் எழுப்பும் என்று எப்படித்தான் எதிர்பார்க்க முடியும்.

அதே வேளையில் சென்னையிலிருந்து வெளிவரும், தினமணியும் இந்தியன்எக்ஸ்பிரஸ் ஆங்கிலத்தினசரியும் இலங்கைத் தமிழர்களின் கோரிக்கையிலுள்ள நியாயத்துக்கு ஆதரவு தந்து தலையங்கம் தீட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது.

## தமிழரசு மீது...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

எத்தர்களே என்ன சொல்வீர்கள் இனி?

பதவிப் பித்து தமிழரசாருக்கு என்று கூறிவந்த மதோன்மத்தர்களே! இனி உங்கள் விளக்கம் என்ன?

ஐ. தே. கட்சியுடன்சங்கமமாகிவிட்டது தமிழரசுக் கட்சி என்று கூறித்திரிந்த நச்சுப்பாம்புகளே! இப்போது உங்கள் பதில் என்ன?

தமிழரசுக்கட்சி அரசாங்கத்திலிருந்து வெளியேறவில்லையேஎன்று அங்கலாய்த்தவர்கள்—இன்று நரம்பு இல்லாத நாக்கினால் கூறி வருவது என்ன தெரியுமா?

- தேர்தல் சமீபித்துவிட்டதால்தான் தமிழரசுக் கட்சி அரசாங்கத்திலிருந்து பிரிந்திருக்கிறது.
- ஐ. தே. கட்சியுடன் இரகசிய ஒப்பந்தம் செய்துகொண்டே வெளியேறியிருக்கிறது.
- திருமலை கோணேசர் ஆலயப் பிரச்சினையில் தமிழரசுக் கட்சி வெளியேறியது வெறும் கண்துடைப்பு. தமிழ் மக்களை ஏமாற்றும் மற்றொரு ஸ்டண்ட்.

இப்படி இன்னும் [illegible]தோ கூறும் அரசியல் எருமைகளே! எதையாவது கூறுங்கள்! ஆண்டவன்தான் நரம்பில்லாத நாக்கை உங்களுக்கு தந்துவிட்டானே!

ஆனால் தமிழ் மக்களுக்கு நீங்கள் கூறுவது அத்தனையுமே ஏமாற்று என்பது தெளிவாக எப்பொழுதோ புரிந்து[illegible]

— தமிழ்மகன். கொழும்பு.

## தமிழரசார் வெளியேறியதால் ஏற்படக் கூடிய பலாபலன்கள்

தமிழரசுக் கட்சி அரசாங்கத்திலிருந்து வெளியேறி எதிர்க்கட்சியில் தனிக் குழுவாக இயங்கத்தொடங்கியபின்னர் அரசாங்கக் கட்சிகளினதும், எதிர்க்கட்சிகளினதும் பலம் பின்வருமாறு இருக்கப்போகிறது.

அரசாங்கக் கட்சி

| | | |
|---|---|---|
| ஐ. தே. க. | — | 65 |
| சி.ல.சு.சோ. க. | — | 5 |
| தமிழ் காங்கிரஸ் | — | 3 |
| எம். இ. பி. | — | 1 |
| நியமனம் | — | 6 |
| மொத்தம் | | 80 |

எதிர்க் கட்சி

| | | |
|---|---|---|
| சுதந்திரக் கட்சி | — | 41 |
| சமசமாஜக் கட்சி | — | 10 |
| கம்யூனிஸ்ட் | — | 4 |
| எஸ்.டி. | | |
| பண்டாரநாயகா | — | 1 |
| எஸ். எம். பி. | | 1 |
| ஜே. வி. பி. | | 1 |
| | | 58 |

இதைவிட எதிர்க்கட்சியில் ஐந்து சுயேச்சை உறுப்பினர்கள் இருக்கிறார்கள்; இந்த ஐந்து பேரில் ஊர்காவற்றுறை பா.உ. திரு. நவரத்தினம் 12 தமிழரசுக் கட்சிப் பிரதிநிதிகளுடன் தமிழ் மக்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளில் இணைந்தே நிற்பார் என்று எதிர்பார்க்கலாம். திரு. பிறின்ஸ் குணசேகரா சுதந்திரக்கட்சி சார்புள்ளவர். மற்ற மூவர்களான முதியான்சே தென்னக்கூன், மூதூர் முதலாவது எம். பி. மொகம்மதலி, நிந்தவூர் மஜீத் ஆகியோர் மதில்மேல் பூனைகளாகஇருக்கிறார்கள். இவர்கள் மூவரும் எந்தப் பக்கமும், எந்த நிமிடமும் சாயலாம்.

**தமிழரசுக் கட்சி, தமிழ் மக்களுக்கு தீமை தராத பிரச்சினைகளில் தொடர்ந்தும் அரசாங்கத்தை ஆதரிக்க முடிவு செய்திருப்பதால், அரசாங்கத்தின் நிலைமையில் உடனடியாக மாற்றம் எதுவும் ஏற்பட இடமில்லை.**

ஆனால் ஏதாவது ஒரு சிக்கலான பிரச்சினையில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் 58 பேருடன், எதிர்க்கட்சியிலுள்ள சுயேச்சை உறுப்பினர்கள் நால்வரும் ஊர்காவற்றுறைப் பிரதிநிதியும், தமிழரசு உறுப்பினர்கள் 12 பேரும் சேர்ந்து அரசாங்கத்தை எதிர்த்து வாக்களித்தால் (மொத்தம் 75 பேர்) அரசாங்கத்தின் பெரும்பான்மைப் பலம் நாலிலைமையில் ஆக ஐந்தே ஐந்து பேரில் தொங்கிக்கொண்டிருக்கும் என்பது துலாம்பரமாக தெரிகிறது.

ஆகவே, அரசாங்கம்—சபையைக் கலைத்துமறு தேர்தலுக்கு செல்லாமல் தொடர்ந்து மீதமுள்ள ஒன்றரை ஆண்டுகள் ஆள விரும்பினால், தமிழரசுக் கட்சியையே நம்பியிருக்க வேண்டிய சூழ்நிலை இன்னும் இருக்கிறது. ஆக' அரசாங்கத்தில் அங்கம் வகித்துவந்த நேரத்தைவிட, இன்று தமிழரசுக் கட்சி உறுப்பினர்களின் மதிப்பு இன்னும் அதிகமாக உயர்ந்திருக்கிறது.

எனவே மிச்சசொச்ச காலத்தையும் ஆளவேண்டும் என்ற அபிலாஷை யூ. என். பி.க்கு இருந்தால், அது, தமிழ் மக்களுக்கு பாதகமான விஷயங்கள் எதிலும் கைபோடாமலிருப்பதே புத்திசாலித்தனமானது.

தமிழரசார் அரசாங்கத்திலிருந்து வெளியேறிவிட்டதால், இனிமேல் இன்றைய அரசாங்கம் தன்னை ஓர் தேசிய அரசாங்கம் என்று அழைத்துக்கொள்ளும் தகுதியையும் இழந்துவிட்டது. பிரதமர்தம்மை ஓர் தேசியப் பிரதமர் என்று இனி வர்ணித்துக் கொள்ளவும் முடியாது.

தமிழரசார் வெறியேறியதனால்—அரசாங்கம் தனது ஸ்திரத்தன்மையை இழந்துவிட்டது. எனவே இலங்கைக்கு கடனுதவிகள் அளிக்க இனி வெளிநாடுகள் தயங்கவே செய்யும். இலங்கையின் இனப் பிரச்சினைகளைத் தாம் தீர்த்துவிட்டதாக வெளிநாடுகளில் பிரதமர் இனியும் பிரசாரம் செய்ய முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பல்லாயிரக்கணக்கான இந்துக்களின் அபிலாஷையைவிட ஒரு பௌத்த பிக்குவின் ஆட்சேபனை பெரிதா?

# திருமலை புனித நகர் பிரச்சினையில் தேசிய அரசிலிருந்து வெளியேற தமிழரசு பொதுச்சபை முடிவு

தேவாரப்பாடல் பெற்ற இந்துக்களின் பழம்பெரும் தலமான கோணஸ்வர ஆலயம் அமைந்துள்ள திருமலை பிரெடெரிக் கோட்டை இந்துக்களின் புனித நகராகப் பிரகடனம் செய்யப்பட வேண்டுமென்ற தமிழ் மக்களின் நீண்டகால கோரிக்கையை—ஆர். ஜி. சேனநாயகா சேருவில பௌத்தபிக்கு போன்றோரின் வகுப்புவாத கூக்குரலுக்கு அடிபணிந்து—பிரதமர் நிராகரித்ததையும், புனிதநகராக்குவது சம்பந்தமாக உள்ளூராட்சி அமைச்சர் திரு. மு. திருச்செல்வம், திரு. பி. சிறீஸ்கந்தராசா தலைமையில் நியமித்திருந்த மூவர்கொண்ட விசாரணைக் குழுவை கலைத்துவிட பிரதமர் உத்தரவிட்டதையும் தொடர்ந்து—1965ம் ஆண்டு மார்ச் 25-ம் திகதியிலிருந்து கடந்த மூன்றரை ஆண்டுகளாக அரசாங்கப் பாராளுமன்றக் குழுவில் அங்கம் வகித்து வந்த தமிழரசுக்கட்சிஅதிலிருந்து உடனடியாகவெளியேறி பாராளுமன்றத்தில் தனிக் குழுவாக இயங்க வேண்டுமென்று தமிழரசுக்கட்சி பொதுச்சபை தீர்மானித்துள்ளது.

6மணி நேரத்துக்கு அதிகமாக இன்றைய அரசியல் சூழ்நிலை பற்றி அலசி ஆராயப்பட்ட பின்னர், அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த இத் தீர்மானம் தமிழரசுப் பொதுக்குழுவில் ஏகமனதாக நிறைவேறியது திருமலைப் பிரெடெரிக் கோட்டைப் பகுதியை புனித நகராக்கும் விடயம் பற்றி ஆராய்வதற்கு தாம் நியமித்த கமிசனை ஒரு பௌத்த பிக்குவின் வேண்டுகோட்படி பிரதமர் கலைத்துவிட உத்தரவிட்டுள்ளதைத் தொடர்ந்து உள்ளூராட்சி அமைச்சர் பதவியிலிருந்து தம்மை விலகுவதற்கு அனுமதிக்கும்படி திரு. மு. திருச்செல்வம் பொதுச்சபைக்கு விடுத்த கோரிக்கையையும் பொதுச்சபை அங்கீகரித்தது.

## தமிழரசுக் கட்சியின் தீர்மானமறிந்து நாடெங்குமுள்ள தமிழ் மக்கள் குதூகலம்

யாழ்ப்பாணத்திலுள்ள கட்சிப் பணிமனையில் சென்ற வார இறுதியில் நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் பொதுச்சபைக் கூட்டத்தில் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த இம் முடிவு எடுக்கப்பட்டது.

பொதுச் சபைக் கூட்டத்துக்கு கட்சித் தலைவர் டாக்டர்; இ. மு. வி. நாகநாதன் தலைமை வகித்தார். பொதுச் சபைக் கூட்டத்தில் சுமார் 80 உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

கோணசராலயம் அமைந்துள்ள பிரெடெரிக் கோட்டையை புனித நகராக்கும்படி மிக நீண்டகாலமாகவே திருமலை தமிழ் மக்களும் பல்வேறு இந்து சமய சங்கங்களும் வலியுறுத்தி வந்தும், அக் கோரிக்கையை ஒரு பௌத்த பிக்குவின் ஆட்சேபனைக்கு பயந்து பிரதமர் நிராகரித்த பின்னரும் தொடர்ந்து அரசாங்கத்திலிருப்பதில் பிரயோசனமில்லையென்றும் கட்சி உடனடியாக அரசாங்கத்திலிருந்து வெளியேறி தனிக்குழுவாக இயங்க வேண்டும் என்றும் பொதுச் சபையில் மிகப் பெரும்பான்மை உறுப்பினர்கள் வற்புறுத்தியதைத் தொடர்ந்து மேற்கண்ட தீர்மானம் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

### பிரதமர் கடிதம்

கடந்தவாரம் பிரதமர் கிழக்குமாகாண மகாசங்கத் தலைமைப் பிக்குவான வண. மங்கலதர்ம கீர்த்தி சிறீ தம்பசார சிறீ சுமேதஸ்கர நாயக தேரோ என்பவருக்கு எழுதியிருந்த கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்.

'திருமலையில் ராஜசிங்கன் கோட்டை என்று முன்னர் அழைக்கப்பட்டதும், ஒல்லாந்தரால் பெயர் மாற்றம் செய்யப்பட்டு தற்போது பிரெடெரிக் கோட்டை என அழைக்கப்பட்டு வருவதும் பௌத்தர்களின் வணக்கத்துக்குரியதுமான பழம் பெரும் கோகன்ன முகாவிகாரை, சிங்களவர்களோ, பௌத்தர்களோ அல்லாதவர்களின் கையில் போகப்போவதாக கூறும் உங்கள் 29-8-68 கடிதம் கிடைத்தது. இதுபற்றி ஆராய்வதற்கு நியமிக்கப்பட்டுள்ள குழுவை நிறுத்தி வைக்கும்படி உள்ளூராட்சி அமைச்சரிடம் கூறியுள்ளேன். இது பிரச்சினைக்குரிய ஓர் விடயமென்பது எனக்குத் தெரியும். இதுபற்றிச் சகல தரப்புக் கருத்துக்களும் ஆராயப்பட்ட பின்னரே கமிஷன் நியமிக்கப்பட வேண்டும்''

### செல்வா ஆட்சேபம்

பிரதமரது மேற்படி முடிவுக்கு பின்னரே உள்ளூராட்சி அமைச்சர் பதவியிலிருந்து விலகுவது என்ற தீர்மானத்துக்கு திரு. திருச்செல்வம் வந்தார். இதைத் தொடர்ந்து திரு. செல்வநாயகம் கடுமையான தொனியில் பிரதமருக்கு ஓர் ஆட்சேபக் கடிதம் எழுதியிருந்தார்.

திருமலை கோணசராலயம் அமைந்துள்ள பகுதியை புனித நகராக்க வேண்டுமென்ற கோரிக்கை தேசிய அரசாங்கம் அமைக்கப்பட்ட நாளிலிருந்து விடுக்கப்பட்டுவருகிறது. திருமலை இந்துமாமன்றம் திருமலை இந்து வாலிபர் சங்கம், திருமலை நகராண்மைக் கழகம், கோணசராலய புனருத்தாரண சபை போன்ற பல்வேறு சபைகளும் சங்கங்களும் இதை வலியுறுத்தி வந்தன.

### தமிழ் மக்கள் வரவேற்பு

திருமலைப் புனித நகர் பிரச்சினையில் அரசாங்கம் நடந்துகொண்ட விதத்தைக் கண்டித்து தமிழரசுக்கட்சி அரசாங்கத்திலிருந்து வெளியேறுவது என்று எடுத்த முடிவை நாடெங்குமுள்ள தமிழ் பேசும் மக்கள் வரவேற்றுள்ளனர். சரியான நேரத்தில் எடுக்கப்பட்ட சரியான முடிவு இதுஎன்ற கருத்து தமிழ்மக்களிடையே நிலவுகிறது.

தமிழரசுக்கட்சியின் அரசியல் விவேகம் வாய்ந்த முடிவைப் பாராட்டி ஆயிரக்கணக்கான தந்திகள் சுதந்திரனுக்கு வந்து குவிந்துள்ளன.

மாவட்டசபைகள் மசோதா கைவிடப்பட்ட பின்னரும் தமிழரசுக்கட்சி அரசாங்கத்தை ஆதரித்துவந்த போதிலும், தமிழ் மக்களுக்கு பாதகமாக அரசாங்கம் நடந்தால் அரசாங்கத்தைவிட்டு வேளியேறத் தயங்கமாட்டோம் என்று தமிழரசுத் தலைவர்கள் வற்புறுத்தி வந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

---

### கோணேசராலயம் பற்றி

## வரலாறு தெரியாமல் உளற வேண்டாம்! சிவானந்தன் அறிக்கை!!

திருமலை புனித நகர்ப் பிரச்சினை பற்றி திருமலை நகர சபைத் தலைவர் டாக்டர் என். சிவானந்தன் பின்வரும் அறிக்கையை விடுத்துள்ளார்.

'சைவ சமயம், சைவக் கோவில்கள் பற்றி எதுவுமே தெரிந்திராதவர்கள் எல்லாம் தெரிந்தவர்கள்போல பேச ஆரம்பித்திருக்கிறார்கள். திரு. ஆர். ஜி. சேனநாயகா குச்சவெளியில் குத்தகைக்குக் காணி கிடைத்த பின்னர் தான், திருமலையை பற்றிக் கேள்விப்பட்டிருப்பார்.

'கோணேஸ்வர ஆலயம் நினைவுக் கெட்டாத காலம் முதல், இந்துக்களால் வழிபட்டு வரும் பழம் பெரும் தலமாகும். லங்கா அதிபதி என்றும், வைத்திய சிரோமணி என்றும் சிங்களவர்கள் அழைக்கும் இலங்கை மன்னன் இராவணன் வணங்கிய திருத்தலம் கோணேஸ்வரம். இவ்வாலயம் கி. மு. 1000—கி. மு. 500 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் தோன்றியிருக்க வேண்டுமென்று வரலாற்று ஆசிரியர்கள் கூறியிருக்கிறார்கள். விஜயன் இந்நாட்டுக்கு வருமுன்பே இவ்வாலயம் இந்நாட்டிலிருந்து வருகிறது.

இந்நாட்டை ஆண்ட சிங்கள, தமிழ் மன்னர்கள் இக்கோவிலைப் போற்றி வந்திருக்கிறார்கள். குளக்கோட்டனும், கஜபாகுவும் இவர்களில் பிரபலமானவர்கள், இத்தகைய பெருமை வாய்ந்த கோவில் சண்டைக்குப் பின்னர் ஏற்பட்டது என்று கூறுவது முட்டாள்தனமான கூற்று.

புனிதநகராக்குவதற்குத் திரு. திருச்செல்வம் நியமித்த விசாரணைக் குழுவை கலைத்துவிட பிரதமர் உத்தரவிட்டதன் மூலம், அமைச்சரவையின் கூட்டு மனப்பான்மை கேலிக் கூத்தாக்கப்பட்டுவிட்டது. வெளிநாட்டார் கை கொட்டிச் சிரிக்கும் நிலை ஏற்பட்டு விட்டது'

---

## 'அமிர்' அறிக்கை

பொதுச்சபையில் எடுக்கப்பட்டுள்ள முடிவுகள் குறித்து பின்வரும் அறிக்கையை திரு. அமிர்தலிங்கம் பா. உ. விடுத்தார்:-

'' தமிழரசுக் கட்சிப் பொதுச்சபை யாழ்ப்பாணத்திலுள்ள தலைமைக் காரியாலயத்தில் 14.9.68-ல் டாக்டர் இ. மு. வி. நாகநாதன் தலைமையில் கூடியது.

கூட்ட ஆரம்பத்தில் திரு. எம். திருச்செல்வம் கோணேஸ்வரர் ஆலய விவகாரத்தில் ஏற்பட்டிருக்கும் சூழ்நிலை காரணமாக தான் ராஜினாமா செய்யத் தீர்மானித்திருப்பதாக ஓர் கடிதத்தை திரு. செல்வநாயகத்திடம் சமர்ப்பித்தார். நிலைமையை விளக்கி, திரு. திருச்செல்வம் பேசிய பின்னர், அவர் ராஜினாமா செய்ய வேண்டும் என்பதனை பொதுச்சபை ஏகமனதாக ஒப்புக்கொண்டது.

இன்றைய அரசியல் நிலைமை பற்றி மேலும் விவாதித்த பின்னர், பின்வரும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

(1) மந்திரிசபையிலிருந்து திரு. திருச்செல்வம் ராஜினாமா செய்தவுடன, கட்சியின் பாராளுமன்றக் குழு, அரசாங்கபாராளுமன்றக் குழுவிலிருந்து வெளியேறி தமிழ் பேசும் மக்களுக்கு பாதகமற்ற விஷயங்களில் அரசாங்கத்தை ஆதரிக்கும் ஓர் சுயாதீனக் குழுவாக பாராளுமன்றத்தில் இயங்கவேண்டும்.

(2) கடந்த மூன்றரை ஆண்டுகளாக அமைச்சரவையில் உறுப்பினராக இருந்து திரு. திருச்செல்வம் தமிழ் பேசும் மக்களுக்கு ஆற்றிய சேவைகளுக்காக அவருக்கு ஆழ்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்ளுகிறது.

(3) இலங்கையின் இனப் பிரச்சினையைத் தீர்க்க சமஷ்டி ஆட்சியே ஓரே வழியென்ற இலட்சியத்தை கட்சியின் பொதுச்சபை மீண்டும் ஊர்ஜிதம் செய்தது. தனித் தமிழ் நாட்டுத் தீர்மானம் நிராகரிக்கப்பட்டது.

---

### த. வா. மு. கைதடிகிளை புதிய நிர்வாகிகள்

தமிழரசு வாலிப முன்னணியின் வருடாந்தப் பொதுக்கூட்டம் கைதடி வடக்கு கி. மு. ச. மண்டபத்தில் 5.9.68-ல் நடைபெற்றது. பின்வருவோர் புது வருட உத்தியோகத்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர் வ. சுப்பையா, உபதலைவர் இ செல்லையா, கி. ச. தலைவர் கைதடி, செயலாளர் மாறன், உப செயலாளர் கு. இராசேந்திரன், தனாதிகாரி வா சின்னத்தம்பி, உபதனாதிகாரி க. கணேசலிங்கம்.

செயற்குழுவில் பின்வருவோர் அங்கம் வகிக்கின்றனர்: வே. குமாரசுவாமி, நா. செல்வராசா, சு. சின்னத்துரை, ஐ. தனஞ்செயன் (கி. ச. உறுப்பினர் கைதடி) சுந்தரஞானமுத்து, இ. விக்னேஸ்வரன், க. தம்பிப்பிள்ளை (மூ. கி. ச. தலைவர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்து நட்சத்திரங்களுடன் ஐம்பது நிமிடங்கள்!

அன்று வீனஸ் பிச்சர் ஸாரின் புதிய படத் திற்கான ஆரப்டவிழா. வித விதமான அலங்காரங்கள், சங்கீக் கவரும் வேலைப் பாடுகள். சந்தனமும் நறு மலரும் நீட்டப்பெறுகின் றன. 'என்ன கல்யாண தட புடலாகஇருக்கிறதே'என்று கேட்டவாறே நுழைகிறோம். 'ஆமாம் சார் கல்யாணம் தான் நடக்கப் போகிறது. உள்ளே போய் பாருங்கள்' என்றார் வரவேற்பாளர்.

"அட! ஆமாம் கல்யாண வீடேதான். அதோ மணப் பந்தல்! அதோ புரோகிதர் கள்! அங்கே பெண்வீட்டார் இங்கே பிள்ளை வீட்டார்! சரிதான் சுபமான நாள் மங் களகர மான ஏற்பாடு' என்று பாராட்டிக் கொண் டே பார்வை யிடுகிறோம். 'டக்,கென்று நம் விழிகள் பார்த்த இடத்திலேயே நிற் கின்றன. என்ன விஷயம்? அதோ அங்கே எம். ஜி. ஆர். அமர்ந்திருக்கிறார். படப்பிடி குத் தேவையான பாயிண்டு களை அலசிக்கொண்டு. அவர ருகே போகிறோம்'

### எம். ஜி. ஆர்.

'வணக்கம்' என்றதற்கு தமக்கே உரித்தான பாணி யில் பதில் வணக்கம் தெரி வித்துப் புன்னகைக்கிறார். எம். ஜி. ஆர்.

மெல்லப் பேச்சு ஆரம்ப மாகிறது.

'கண்ணன் என் காதலன்' வெளிவந்தாயிற்று. இப் பொழுது உங்களுடைய அடுத்தது என்னவென்று யோசித்திருக்கிறீர்கள்?

### அடிமைப்பெண் வளர்கிறாள்

"அடிமைப் பெண்ணுக்கான வேலைகள் நடந்து கொண்டி ருக்கின்றன. நல்ல புதுமை யான முறையில் அமையும் என நினைக்கின்றேன்"

"என்ன மாதிரி கதை சொல்ல முடியுமா?,,

"சொல்கிறேன் கேளுங் கள்: ஒரு கொடியவன். அவன்ஒரு தாயின் மீது பழி வாங்க வேண்டும் என்று தீர்மானித்து அவளுடைய ஆருயிர் குழந்தையைத் தூக் கிக்கொண்டு போய் விடுகி றான், மூன்றடி உயரமே யுள்ள ஒரு பெட்டியில் அந்த குழந்தையை வளர்க்கிறான்: வளரும் அந்த சிறுவனுக்கு உலகமே அந்தபெட்டிதான். ஊண் உறக்கம் எல்லாம் அதற்குள் தான். குனிந்து குனிந்து நடந்து வாயாலே யே உண்டு, மிருகங்களைப் போல நீரை நக்கியே குடி த்து முதுகு நிமிராமலேயே வளர்கின்றான் அந்தச்சிறு வன், இருபதாண்டுகளுக்கு இப்படி ஒரு வாழ்வு! எப் படியோ வெளியே வருகின் றான், இருட்டிலே பழகின வனுக்கு வெளி உலகம் மிக வும் புதுமையாக இருக் கிறது.

நிமிர்ந்து நடக்கும் மற்ற பக்களைப் பார்க்கும் பொழு து முதலில் ஒரு ஏக்கம், பின் ஒரு ஆசை; அதை தொடர் ந்து ஒரு துணிவு; அதற்கப் டால் ஒரு முயற்சி, மெல்ல மெல்ல வளைந்த முதுகு பனர்ந்தது. வீரம் மிக்க வாலிபனாக மிடுக்கு மிக்க பனிதனாக நடக்க முடிகிறது அவனால்' என்று நிறுத்தினார்.

கண்ணை மூடிக் கொண்டு மக்கள் திலகம் கூறிய கதை யைரசித்துக்கொண்டிருந்த நாம் 'சட்'டென்று கண் விழித்துப் பார்க்கிறோம்— 'ஷாட்'டுக்காக எழுந்து போய்விட்டாரா என்று. நல்ல வேளை கண்முன்னே தான் உட்கார்ந்திருக்கிறார்.

'என்ன? சுவாரஸ்யமான கட்டத்தில் நிறுத்திவிட்டீர் களே?' என்று கேட்டோம்.



'எதுவரைச்கும் நடந்திருக் கிறதோ அதுவரைக்கும் சொன்னேன். இன்னும் படப்பிடிப்பு நடக்க வேண் டுமே' என்றார்.

அப்பொழுது டைரக்டர் ப. நீலகண்டன் அங்கு வந் தார். 'மன்னித்துக் கொள் ளுங்கள்' என்று பண்போடு கூறிவிட்டு ஒரு ஷாட்டுக் சாக எழுந்து போனார் எம். ஜி. ஆர்.

'ஷாட்' முடிந்தது விரை விலேயே.

'ம்...அப்புறம்?' என்று கேட்டார். கைக் குட்டை யால் முகத்தை மெல்லத் துடைத்தவாறே.

### விரிவான விளக்கம்!

ஆமாம். உங்கள் கண் ணன் என் காதலன் படத் தில்'மல்லிகா'(ஜெயலலிதா ஏற்றிருக்கும் வேடம்) என்ற பாத்திரத்தைப் பற்றிப் பல வேறு அபிப்பிராயங்கள் சொல்லப்படுகின் றனவே...'

'உங்கள் அபிப்பிராயம் என்ன?' என்று கேட்டார் எம். ஜி. ஆர். 'சட்'டென்று:

'ஒரு பெண் தன் கணவனை எத்தனை காலம் தான் இப் படி ஒரு வேடம் போட்டு ஏமாற்ற முடியும்? இதுசாத் தியமா? அவளுடைய பாத் திரமே மனதிற் கொவ்வாத தாக இருக்கிறதே' என் றோம்.

'சரியான கேள்வி கேட் டீர்கள்' என்று சொல்லி விட்டு ஆரம்பித்தார் எம். ஜி. ஆர். 'இதோ பாருங் கள். அந்தப் பெண் மல்லிகா வின் பாத்திரம் இதுவரை தமிழ்த் திரையுலகில் வராத ஒன்று. ஒரு பெண் மனது வைத்தால் எந்தக் காரியத் தையும் செய்து முடிப்பாள் என்பதை நிரூபிப்பதற்காக எழுந்த பாத்திரம் அது. எத்தனையோ பெண்கள் இவ் வுலகத்தில் இருக்கிறார்கள். ஒவ்வொருவருக்கும் ஒரு குணம் உண்டல்லவா? இது அதுமாதிரி ஒன்று. மேலும் பல வருடங்களாக அவள் அவ்வாறு இருக்கிறாள் என்று ஏன் கற்பனை செய்து கொள் கிறீர்கள்? சில நாட்களில் கூட இது நடந்து முடிந் திருக்கலாமல்லவா? அது வரையில் அவள் திறமை யாக நடித்திருக்கலாமில் லையா? இதைத்தான் நாங் கள் தெளிவுபடுத்த முயன் றுள்ளோம்.'

"மக்கள் இதை புரிந்து கொள்வார்களா அவ்வளவு சுலபமாக?"

"நான் அப்படி சொல் லவே மாட்டேன்; புரிந்து கொள்வது கொஞ்சம் கடி னம்தான்: புதுமை புதுமை என்பவர்களுக்குப் பின் எப் படித்தான் புதுமையை வழங்குவது? மேலும் இந்தப் படத்தில் மற்றபடங்களிலில் லாத சிலவற்றைக் காண லாம்: கதாநாயகன், மல்லி காவைமணக்க எவரும் முன் வரமாட்டார்களே என்ற பரிவுடன் மணக்கிறான். அதன்பின் அவளை மனைவி யாக பாவிப்பதில்லை. தன் தாய்போல அவளைக் கருதி, அவளுக்கு வேண்டிய சேவை களைச் செய்துவருகிறான்' என்று நீண்டதொரு விளக் கம் தந்தார் எம். ஜி. ஆர்.

"புரிந்தது. உங்களுடைய கண்ணோட்டத்தின்படி பார்த்தால் இது சாத்திய மான பாத்திரம்தான்" என் றோம்.

மற்றொரு 'டேக்'குக்காக அவர் விடை பெற்றுக் கொள்ள நாமும் விடை பெறுகிறோம் அவரிட மிருந்து.

### ஜெயலலிதா

மற்றொரு பக்கத்தில் தன் தாய் சந்தியாவுடன் உட் கார்ந்திருந்தார் அப்படத் துக்கதாநாயகி ஜெயலலிதா கிராமிய உடையுடன்.

### ஓய்வே இல்லை!

"திருநெல்வேலியில் ஒரு நடன நிகழ்ச்சிக்காக உங் களுக்கு அழைப்பு விடுத் தார்களாம். உங்களால் இய லாது என்று சொன்னீர் களாமே?" என்று கேட் டோம்.

"ரொம்ப ஆசைதான் நடனமாடுவதென்றால்—ஒரு புத்துணர்ச்சியைக் கொடுக் கிறது இல்லையா விறுவிறுப் பான நடனங்கள்! ஆனால் என்ன செய்யறது? நேரமே இல்லையே! மதுரை போன்ற ஊர்களாக இருந்தால் ப்ளே னில் போய், ப்ளேனிலேயே வந்துவிடலாம். இல்லையென் றால் 'ட்ரெயின் ஜெர்னி' தான். இங்கே இருக்கிற ஷூட்டிங்குகளையெல்லாம் ஒத்திப் போட வேண்டி வரும். மற்றநடிகர்கள்இருக் கும்பொழுது நாம் இருக்க மாட்டோம். தொல்லை தானே! மற்றப்படி நான் 'ப்ரீயாக இருக்கும் போது 'டான்ஸ்' ஆடு வதற்கு நான் எப்பொழு துமே ரெடி,' தான்."

"உங்களுக்கு ஓய்வு ஒழிச் சலே இல்லை என்று சொல் லுங்கள்."

"கிட்டத்தட்ட அப்படி தான் என்று வைத்துக் கொள்ளுங்களேன். ஆனால் ஓய்வும் கிடைப்பதுண்டு."

"அப்பொழுது என்ன செய்வீர்கள்?"

"புத்தகம் படிப்பதென் றால் விருப்பம் அதிகம். அதி லும் 'கிளாஸிகல்ஸ்' மேல் கொஞ்சம் அதிகமாகவே ஆசை உண்டு. ஷேக்ஸ்பியர், [illegible] முதலியோருடைய படைப் புக்கள் எனக்குப் பிடிக்கும்" என்றார் ஜெயலலிதா.

"தமிழில் ஒன்றும் நவீ னம் படிப்பதில்லையா?"

### தமிழில் ஆர்வம்!

"தமிழின் மேல் ஆர்வம் உண்டு. ஆனால் அதற்குத் தேவையான தேர்ச்சி இல்லை. பத்திரிகைகள் செய் திகள் எல்லாம் படிப்பேன்



விடாமல். நல்ல தேர்ச்சி பெறவேண்டும் என்பதற் காக ஒரு ஆசிரியரை வைத் துக் கொள்ளக்கூட ஒரு யோசனை இருக்கிறது."

"சமீபத்தில் வெளிவந்த கண்ணன் என் காதலனில் உங்களுடைய வேடத்தைப் பற்றி என்ன நினைக்கிறீர் கள்?"

"அதை நீங்கள் தானே எனக்குச் சொல்லவேண்டும் சார்."

"கொஞ்சம் வழக்கத்தி ற்கு மாறுபட்ட பாத்திரம் தான், சோகரசத்திற்கு வாய்ப்பு உண்டு. கூடியவரை நன்றாகவே செய்திருக்கிறீர் கள் என்று ஒரு அபிப்பிரா யம் நிலவுகிறது."

"நானும் அப்படித்தான் நினைக்கிறேன்" என்றார் ஜெயலலிதா.

"இப்பொழுதெல்லாம் கவர்ச்சிக்கு ரொம்ப இடம் கொடுக்க ஆரம்பித்துவிட் டார்கள் இல்லையா?" என்று கேட்ட அவருடைய தாய் சந்தியா "எங்களிடம் கூட, இன்னும் ஜனங்கள் விருப்பப் படி நடிக்க துணியவேண்டும் என்கிறார்கள் நாங்கள் அதற்கு சம்மதிக்கவில்லை; கௌரவமும்தேவை இல்லை யா?" என்றார்.

"உண்மை, உண்மை" என்று சொல்லி புறப்பட் டோம்.

**(அடுத்த வாரம் முடியும்)**

---

## புதிர்

(2-ம் பக்கத் தொடர்ச்சி

'கிராமத்திலே வேறொரு பெண்ணை நிச்சயம் செய்து கொண்டு கலியாணத்தை முடிக்கப் பெற்றோர்கள் தயாராக இருந்தார் களோ?'

'உங்கள் ஊகம் என் விஷ யத்தில் முழுமையாகப் பலிக் கப் போவதே இல்லை. நீங் கள் எளிதில் கற்பனை செய் யக்கூடிய காரணங்கள் ஏதும் என் வாழ்வில் குறுக் கிடவும் இல்லை. தடையாக வும் அவை இருக்க இயலா. ஜாதி போன்ற சமூகக் கார ணங்களும் என் வாழ்வில் குறுக்கிடச் சக்தியற்றவை: அவற்றை எதிர்க்கப் போது மான மனபலம் எனக்கு அப் போதே இருந்தது.'

நான் முடிவைத் தெரிந்து கொள்ள மிக ஆவலாயிருக் கிறேன் என்பதை அவர் என் முகபாவத்திலிருந்து தெரி ந்துகொண்டிருக்கவேண் டும்.

'என் முட்டாள்தனம் மட் டுமே அதற்குக் காரணம்'— என்றார்.

அது காரணமாக இருந் திருக்க முடியாது என்பத ற்கு அறிகுறியாக நான் தலையை அசைத்தேன்.

'என் அறிவாற்றலிலே முழு நம்பிக்கை உடைய நீ இதை ஏற்றுக்கொள்ளமாட் டாய் என்பதை நான் நன் றாக அறிவேன். எழுத்தாளர் களின் படைப்புக்களை மட் டும் வைத்துக்கொண்டு அவர்களின் சொந்த வாழ்க் கையைப் பற்றி எளிதில் முடி வுக்கு வந்துவிடுகிற சில வாசகர்கள் இருக்கிறார்கள் அல்லவா? அதைப் போல நீயும் என் விஷயத்தில் ஏமா ந்து போவாய்!'

—என்று சொல்லிவிட்டு கதையைத் தொடர்ந்தார்.

'ஊருக்கு வந்த பின் ஒரு நாள் எண்ணெய் தேய்த்துக் கொள்வதற்காக உட்கார்ந் தேன். தலைக்கு மட்டும் தேய்த்துக்கொண்டு முழுகி னால் என் தாய் வருத்தப்படு வார்கள். அவர்கள் திருப் திக்காக ஊருக்கு வரும்போ தெல்லாம் உடம்பெல்லாம் வழிவழிய எண்ணெய் தேய் த்து முழுகுவது வழக்கம்; அன்றும் அதுபோல உடம் பெல்லாம் எண்ணெய் தேய் த்துக்கொள்ளத் தயாரா னேன். என் தொடைகளில் பளிச் சென்று சில எச்சில் தழும்புகள் தென்பட்டன. அவற்றைக் கிள்ளிப் பார்த் தேன். சொரணையே இல்லை...'

'உங்கள் உடம்பு இப் போது நன்றாக இருக் கிறதே.'

'அந்த நோயோடு ஐந் தாண்டுகளுக்குமேல் போ ராடி வென்றேன். எச்சில் தழும்புகளை டாக்டரிடம் காட்டியவுடன் அவர் சொன்ன வார்த்தைகள் என் னைத் திருமணத்தையே வெறுக்கச் செய்தன. என க்கு என் காதல் தெய்வத் திடம் உண்மையைச் சொல்ல மனம் இடங்கொ டுக்கவில்லை. பொய் சொல் லத் தைரியமில்லை.'

'அதற்குப் பிறகு...'

'நான் சென்னைக்குச் செல்லவே இல்லை.

'உங்கள் காதல் தெய் வம்'?

அவர் உடனே பதில் சொல்லமுடியாமல் திணறி னார். நாதழுதழுத்தது. கண் ணீர் மணிகள் சிந்தின.

'என் தெய்வம் தெய்வ லோகத்திற்கே போய்விட் டது கண்ணன்.'

அதற்குப் பிறகு எனக்கு அங்கிருக்க மனம் இல்லை.


(யாவும் கற்பனை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றி முழக்கமிடும் 4-வது மாதம்

சென்ட்ரல் (மருதானை) ராணி (யாழ்ப்பாணம்) பராக்கிரம (கேகாலை) றேயல் (வவுனியா) சென்ட்ரல் (நாவலப்பிட்டி) சாரதா (களுவாஞ்சிக்குடி)

ஆகிய திரைகளில்



★ ஜெமினிகணேசன் ★ டி. கே. பகவதி ★ பி. சரோஜாதேவி
★ எல். வரலட்சுமி ★ நாகேஷ் ★ விஜயநிர்மலா — நடித்த —

கே. எஸ். கோபால கிருஷ்ணனின்

# பணமா? பாசமா?

## எமது அடுத்த வெளியீடு

ஜெமினி, சரோஜாதேவி, விஜயகுமாரி, அசோகன்,
தங்கவேலு, சோ, கருணாநிதி —நடித்த—

ஏ. எல். எஸ் புரொடக்ஷன்

# பெண் என்றால் பெண்

## செப்டம்பர் 27 வெள்ளி முதல்!

செல்லமகால் (கொழும்பு) ஈரோஸ் (பாமன்கடை) இம்பீரியல் (மட்டுநகர்)
அசோகா (புத்தளம்) நெல்சன் (திருமலை) வின்ஸர் (யாழ்ப்பாணம்)

* ஜெய்சங்கர் * ராஜஸ்ரீ * நாகேஷ் * மாதவி
* சுந்தரராஜன் * பண்டரிபாய்
* ஸ்ரீகாந்த் * வி. எஸ். ராகவன்
—நடித்த—

# செல்வமகள்



கெயிட்டி (கொழும்பு) செப்டம்பர் 28 சனி முதல்
அட்வெஞ்சேஸ் ஆப்ரொபின்ஹூட் (கலர் இந்தி)

## 2-வது வாரமாக காட்சியளிக்கிறது



கெப்பிட்டல் (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டுநகர்)
ஸ்ரீ கிருஷ்ணு (திருகோணமலை) விஜிதா (அட்டன்) கல்யாணி (நாவலபிட்டி) மொடேன் (பண்டாரவளை)

● எம். ஜி. ஆர்., ● சரோஜாதேவி ● நம்பியார்
● நாகேஷ் ● மனோரமா —நடிக்கும்—

# நான் ஆணையிட்டால்

## 2-வது வெற்றிவாரம்

விஜிதா (மஸ்கெலியா) மைலன் (கொழும்பு)

★ ஜெய்சங்கர் ★ கே. ஆர். விஜயா —நடிக்கும்—

# பொன்னான வாழ்வு

## 7-வது வாரம்

இங்ஸ்லி (கொழும்பு) நான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர் ... கொழும்பு பண்டாரநாயக்கவீதி 194 ,இலக்கத்தில்
1968-ம் வருடம் செப்டம்பர்மாதம் 21-ம் திகதி சனிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.